# தேவாரப் பாமாலை





காயத்திரி பப்ளிகேஷன்


தொகுப்பு : வே. நவமோகன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Saba. Dushpanathan
SWORN TRANSLATOR.
THURKA BOOK SHOP - CHUNNAKAM

# தேவாரப் பாமாலை



தொகுப்பு

வே. நவமோகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | தேவாரப் பாமாலை |
| தொகுப்பாசிரியர் | : | வே. நவமோகன் |
| பதிப்புரிமை © | : | காயத்திரி பப்ளிகேஷன் |
| முதற்பதிப்பு | : | 2015 ஜனவரி |
| பக்கங்கள் | : | 152 |
| விலை | : | ரூ. 250 |
| வெளியீடு | : | காயத்திரி பப்ளிகேஷன்<br>த. பெ. இல. 64,<br>தெஹிவளை.<br>☎ 011 - 4981906, 0777 892028 |
| இ-மெயில் | : | navamohanv@yahoo.com |
| இணையத் தளம் | : | www.gayathiri.lk |



பதிப்பாசிரியரின் எழுத்துமூல அனுமதியின்றி இப்புத்தகத்தின் எப்பகுதியையும் மறுபிரசுரம் செய்தலோ, போட்டோ பிரதி செய்தல் உட்பட இலத்திரனியல் அல்லது பொறியியல் சாதனத்தால் கையளித்தலோ தடை செய்யப்பட்டுள்ளது.



| | | |
|---|---|---|
| TITLE OF THE BOOK | : | Thevara Paamalai |
| AUTHOR | : | V. Navamohan |
| COPYRIGHT © | : | Gayathri Publication |
| ISBN | : | 978-955-8741-69-6 |
| FIRST EDITION | : | 2015 January |
| PAGES | : | 152 |
| PRICE | : | Rs. 250 |
| PUBLISHED BY | : | Gayathri Publication<br>P. O. Box 64,<br>Dehiwala,<br>Sri Lanka.<br>☎ 011 - 4981906, 0777 892028 |
| E-MAIL | : | navamohanv@yahoo.com |
| WEB SITE | : | www.gayathiri.lk |



All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without the prior permission of copyright owner.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே....


| | |
|---|---|
| கடவுள் வழிபாடு (சுருக்கம்) | 05 |
| ஆசார முறைகள் | 06 |
| பூசைக்குரிய பூக்கள் | 07 |
| கடவுளுக்கு ஆகாத பூக்கள் | 08 |
| திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரால் அருளப்பெற்றது 1 ஆம் திருமுறை முதல் 3 ஆம் திருமுறை வரை | 09 |
| திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச் செய்த நான்காம் திருமுறை தொடக்கம் ஆறாம் திருமுறை வரை | 16 |
| சுந்தரமூர்த்தி சுவாமிகளாலருளிச் செய்யப்பட்டது ஏழாந்திருமுறை | 26 |
| மாணிக்கவாசக சுவாமிகளருளிச் செய்த - திருவாசகம் எட்டாம்திருமுறை | 32 |
| ஒன்பதாந்திருமுறை திருவிசைப்பா | 37 |
| திருப்பல்லாண்டு | 41 |
| பத்தாம் திருமுறை - திருமந்திரம் | 43 |
| பதினோராந் திருமுறை | 45 |
| திருப்புராணம் | 46 |
| திருப்புகழ் | 48 |
| வாழ்த்து | 50 |
| விநாயகர் அகவல் | 51 |
| சிவபுராணம் | 54 |
| திருப்பள்ளியெழுச்சி | 59 |
| திருவெம்பாவை | 62 |
| திருப்பொற்சுண்ணம் | 68 |
| மந்திர வழிபாடு | 75 |
| யாது மாகி நின்றாய்! | 79 |
| ஆதி சக்தி வாழ்கவே! | 80 |
| ராகுகால ஸ்ரீ துர்க்கா அக்ஷ்டகம் | 82 |
| துக்க நிவாரண அஷ்டகம் | 84 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ மகிஷாசுர மர்த்தினி ஸ்தோத்ரம் 87
ஸ்ரீ கருமாரியம்மன் ஸ்தோத்திரம் 89
சுத்த சக்தி ஓம் சிவம்! 92
ஓம் சக்தி ஓம் 93
கற்பக வல்லி! 94
ஜய ஜய ஜய சக்தி! 95
மலை வளர் காதலி 96
திருப்பாவை 97
பெரிய திருமொழி 106
இலக்குமி துதி 108
சரஸ்வதி தேவியின் புகழ் 109
ஆயகலைகள் 112
சகலகலா வல்லிமாலை 113
அபிராமி அந்தாதி 116
திருக்கடவூர்த் துதிப் பதிகம் 118
கௌரி காப்பு 119
முத்துமாரி! 122
ஓம் சக்தி 124
பங்காரு அடிகளார் தோத்திரம் 125
திருவிளக்கு அகவல்! 127
கந்தசஷ்டி கவசம் 128
கந்தரலங்காரம் 138
ஆஞ்சநேயர் துதி 139
ஜெய ஹனுமான் பாடல் 140
ஆறு துணை! 141
நவக்கிரஹ தோஷம் நீங்க... 143
வைரவக்கடவுள் 145
ஸ்ரீ மாருதி கவசம் 146
மங்களம் அருளிடும் மாருதியே! 150
மங்களம் 151
மங்களம் 152



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுள் வழிபாடு
## (சுருக்கம்)

கடவுளுடைய திருவடிகளை அடைவதற்காகவே பிறவி எடுத்தோமாதலால், அத்திருவடிகளைச் சிந்தித்தலும், துதித்தலும், வணங்குதலுமே நமது முக்கியமான கடமையாகும். உடம்பு நயப்படுதற்கு உணவும், மனம் நயப்படுதற்குக் கல்வியும் வேண்டப்படுதல் போல ஆன்மா நயப்படுதற்குக் கடவுள் வழிபாடு வேண்டப்படும்.

உடம்பும் மனமும் ஆன்மாவின் கருவிகள். உடம்பு தொழில் செய்தற்கும், மனம் ஆராய்வதற்கும் கருவியாயுள்ளவை. கருவிகளிலும் பார்க்கக் கருவிகளையுடையவன் மேலானவன். ஆதலால், உடம்பினும் மனத்தினும் மேலானதே ஆன்மா. ஆகவே, உடம்பை நயப்படுத்துவதற்கு வேண்டிய உணவினும் மனத்தை நயப்படுத்துவதற்கு வேண்டிய கல்வியினும் மேலானது ஆன்மாவை நயப்படுத்துவதாகிய கடவுள் வழிபாடு அன்றியும். இவைகள் ஆன்மாவுக்குக் கருவியாயிருத்தலால், இவற்றின் முக்கியமான தொழில் அன்மாவுக்கு வேண்டிய கடவுள் வழிபாட்டில் ஈடுபடுதலேயாம். "திருக்கோயிலை வலம் வந்து சுவாமிக்குப் பூவைச் சாத்தித் தோத்திரம் செய்யாத உடம்பினாற் பயனில்லை" என்றார் திருநாவுக்கரசு நாயனார். கடவுளுடைய திருவடிகளைத் தொழுதற்குத் துணையாய் நில்லாத கல்வியினாற் பயனில்லை என்றார் திருவள்ளுவ நாயனார்.

கடவுள் வழிபாட்டிற்கு உரிய நேரங்கள் காலையும் மாலையுமாம். இவ்வழிபாடு பலவாறாகச் செய்யப்படுகின்றது. சிலர் தேவாரம், திருவாசகம் முதலிய அருட்பாக்களைப் பாடிக் கடவுளைத் தோத்திரம் செய்து தியானித்துச் சிந்தித்து வணங்குவர். வேறு சிலர் இவற்றோடு திருவைந்தெழுத்தை ஓதுவர். சுப்பிரமணியர் தொண்டர் திருப்புகழ் முதலிய அருட்பாக்களையும் திரு ஆறெழுத்தையும் ஓதுவர். வேறு சிலர் சுப்பிரமணியர் முதலிய மூர்த்திகளுள் ஒன்றுக்குப் பூசை செய்வர். மற்றுஞ்சிலர் சிவலிங்க பூசை செய்வர். இன்னுஞ்சிலர் கோயிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்து வழிபடுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசார முறைகள்

**சில முக்கிய ஆசார முறைகள்**

- கோயில் இல்லாத ஊரில் குடியிருக்கக் கூடாது.
- ஜோதிடர், குரு, நோயாளி, கர்ப்பிணி, மருத்துவர், சந்நியாசி முதலானோர்க்கு அவர்களுடைய ஆபத்துக் காலத்தில் கண்டிப்பாக உதவ வேண்டும்.
- பசு, தேர், நெய்க்குடம், அரசு, வில்வம், அரசுடன் சேர்ந்த வேம்பு இவைகள் எதிரில் குறுக்கிட்டால் வலது புறம் சுற்றிச் செல்ல வேண்டும்.
- கையை தரையில் ஊன்றிக் கொண்டு சாப்பிடக்கூடாது.
- துணியில்லாமல் குளிக்கக் கூடாது.
- சூரியனுக்கு எதிரில் மலசலம் கழிக்கக் கூடாது.
- கன்றுக்குட்டியின் கயிற்றைத் தாண்டக்கூடாது.
- மழை பெய்யும் போது ஓடக்கூடாது.
- தண்ணீரில் தன் உருவத்தைப் பார்க்கக் கூடாது.
- நெருப்பை வாயால் ஊதக்கூடாது.
- வானவில்லைப் பிறருக்குக் காட்டக்கூடாது.
- ஈரக்காலுடன் படுக்கக் கூடாது.
- வடக்கிலும், தென்கிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு, வடகிழக்கு எனும் திசைகளில் தலை வைத்துப் படுக்கக் கூடாது.
- பிணப்புகை, இளவெயில், தீபநிழல் இவை நம்மீது படுக்க கூடாது.
- நெல்லிக்காய், ஊறுகாய், இஞ்சி, தயிர் இவற்றை இரவில் சாப்பிடக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூசைக்குரிய பூக்கள்

| | | |
|---|---|---|
| விநாயகர் | - | அறுகு, சண்பகம், பாதிரி, சூரியகாந்தி, வன்னி |
| சிவன் | - | கொன்றை, வில்வம், தும்பை, சங்குப்பூ, செம்பருத்தி |
| விஷ்ணு | - | துளசி, மாதவி, குருந்து, வாகை, மத்யாணி, கருங்கால், கொன்றை, முருக்கம் பூ, அலரி, செம்பரத்தை, செந்திலகம், மருக்கொழுந்து |
| பிரமன் | - | அலரி |
| முருகன் | - | வெட்சி, கடம்பு, முல்லை, குறிஞ்சி, மல்லிகை, காந்தள் |
| சூரியன் | - | தாமரை |
| உமை | - | நீலோற்பலம், தாமரை, சூரியகாந்தி, செம்பவளமல்லி, நந்தியாவட்டை |
| இலக்குமி | - | நெய்தல், செந்தாமரை |
| சரஸ்வதி | - | வெண்தாமரை |
| வரலட்சுமி | - | ஐந்துமடல் கொண்ட தாழம்பூ |
| துர்க்கை | - | செவ்வெருக்கு சிவப்பு, அரலி, கொன்றைமலர் |
| அக்னி | - | வன்னி |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடவுளுக்கு ஆகாத பூக்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| விநாயகர் | - துளசி | சிவன் | - | தாழம்பூ |
| சூரியன் | - வில்வம் | உமாதேவி | - | நெல்லி |
| துர்க்கை | - அறுகு | இலட்சுமி | - | தும்பைப்பூ |
| சரஸ்வதி | - பவளம் | விஷ்ணு | - | எருக்கம்பூ |
| வைரவர் | - நந்தியாவட்டை, மல்லிகை | | | |

## நவக்கிரகங்கள் – பூசைக்குரிய பூக்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| சூரியன் | - செந்தாமரை | சந்திரன் | - | வெள்ளரலி |
| செவ்வாய் | - செண்பகம் | புதன் | - | வெண்காந்தள் |
| வியாழன் | - முல்லை | வெள்ளி | - | வெண்தாமரை |
| சனி | - நீலோற்பலம், கருங்குவளை | | | |
| ராகு | - மந்தாரை | கேது | - | செவ்வல்லி |

## நிறைகுடத் தத்துவம்

| | |
|---|---|
| குடம் | - தசை |
| அதனுள் உள்ள நீர் | - குருதி |
| கூர்ச்சம் | - தலைமுடி |
| மாவிலை | - சடை |
| தேங்காய் | - தலை |
| வஸ்திரம் | - தோல் என்பவற்றைக் குறிக்கும் |
| அதனுள் உள்ள இரத்தினங்கள | - எலும்புகள் |
| குடத்தைச் சுற்றியுள்ள நூல் | - நாடிகள் |
| செபிக்கப்படும் மந்திரம் | - உயிர் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரால் அருளப்பெற்றது

### 1 ஆம் திருமுறை முதல் 3 ஆம் திருமுறை வரை

திருச்சிற்றம்பலம்

தோடுடைய செவி யன்விடை யேறியோர் தூவெண்மதிசூடி
காடுடையசுடலைப் பொடிபூசியென் னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேர்த்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே

வேதமோதி வெண்ணூல்பூண்டு வெள்ளையெருதேறிப்
பூதஞ்சூழப் பொலியவருவார் புலியினுரிதோலார்
நாதாவெனவும் நக்காவெனவும் நம்பாவெனநின்று
பாதந்தொழுவார் பாவந்தீர்ப்பார் பழனநகராரே.

பூவார்மலர் கொண்டடியார் தொழுவார்புகழ்வார் வானோர்கள்
மூவார்புரங்களெரித்தவன்று மூவர்க்கருள் செய்தார்.
தூமாமழைநின்றதிரவெருவித் தொறுவின்னிரையோடு
மாமாம்பிணை வந்தணையுஞ் சாரலண்ணாமலையாரே.

கற்றாங்கெரியோம்பிக் கலியைவாராமே
செற்றார்வாழ் தில்லைச் சிற்றம்பலமேய
முற்றாவெண்டிங்கண் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றாபாவமே

வீடலாலவாயிலாய் விழுமியார் கணின்கழல்
பாடலால வாயிலாய் பரவநின்ற பண்பனே
காடலால வாயிலாய் கபாலி நீள்கடிம்மதில்
கூடலால வாயிலாய் குலாயதென்ன கொள்கையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமரன் நாமமே
சூழ்க வைய முந்துயர் தீர்கவே

வானுலாவும் மதிவந்துலாவும் மதின்மாளிகை
தேனுலாவும் மலர்ச்சோலைமல்குந் திகழ்சிக்கலுள்
வேனல்வேளைவிழித்திட்ட வெண்ணெய்ப் பெருமானடி
ஞானமாகநினைவார் வினையாயின நையுமே

கள்ளார்ந்த பூங்கொன்றைமதமத் தங்கதிர்மதிய
முள்ளார்ந்த சடைமுடியெம் பொருமானாருறையுமிடந்
தள்ளாயசம்பாதி சடாயென்பார்தாமிரவர்
புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கம்வேளூரே

விருதுகுன்றமேருவினாணரவாவன லெரியம்பாப்
பொருதுமூவெயில்செற்றவன் பற்றிநின்றுறைபதியெனநாளுங்
கருதுகின்றவூர்கனை கடற்கடிகமழ் பொழியணி மாதோட்டங்
கருதிநின்று கேதீச்சுரங்கை தொழக்கட வினையடையாவே

மண்புகார் வான்புகுவர் மனமிளையார் பசியாலுங்
கண்புகார் பிணியறியார் கற்றாருங் கேட்டாரும்
விண்புகா ரெனவேண்டா வெண்மாட நெடுவீதித்
தண்புகாச் சாய்க்காட்டெந் தலைவன்றாள் சார்ந்தாரே

கண்காட்டு நுதலானுங் கனல்காட்டுங் கையானும்
பெண்காட்டு முருவானும் பிறைகாட்டுஞ் சடையானும்
பண்காட்டு மிசையானும் பயிர்காட்டும் வயலானும்
வெண்காட்டி லுறைவானும் விடைகாட்டுங் கொடியானே.

வாழ்ந்தநாளும் மினிவாமு நாளும்மிவை யறிந்திரேல்
வீழ்ந்தநாளெம் பெருமானை யேத்தாவிதி யிலிகாள்
போழ்ந்ததிங்கட் பரிசடையி னான்றன் பக லூரையே
சூழ்ந்தவுள்ளம் முடையீர்க ளுங்கடுயர் தீரமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் றிருவாலவாயான்றிருநீறே

வடந்திகழ்மென்முலையாளைப்பாகமதாக மதித்துத்
தடந்திரசேர்புனல்மாதைத் தாழ்சடைவைத்தசதுர
ரிடந்திகழ் முப்புரிநூலர் துன்பமோடின்பமதெல்லாங்
கடந்தவர் காதலில்வாழும் கற்குடிமாமலையாரே

நன்றுடையானைத்தீய திலானைநரைவெள்ளே
றொன்றுடையானையுமை யொருபாகமுடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென்னுள்ளங்களிருமே

பாடல்நான் மறையன் படிபட்டகோலத்தண்றிங்கள்
சூடலன்மூவிரையசூலம்வலனேந்திக்
கூடலர்மூவெயிலு மெரியுண்ணக் கூரெரிகொண்டெல்லி
ஆடலனாதிரைய னாரூரமர்ந்தானே

வீடுபிறப்பெளிதாமதனை வினவுதிரேல்வெய்ய
காடிடமாக நின்று கனலேந்திக்கைவீசி
யாடுமவர்சடையானவன் மேயவாரூரைச்சென்ற
பாடுதல் கைதொழுதல் பணிதல்கருமமே

மங்கையர்க் கரசிவளவர்கோன் பாவைவரிவளைக்கைமடமானி
பங்கயச்செல்வி பாண்டிமாதேவி பணிசெய்து நாடொறும்பரவப்
பொங்கழலருவன் பூதநாயனனால் வேதமும் பொருளுமருளி
அங்கயற்கண்ணி தன்னொடுமமர்ந்த ஆலவாயாவதுமிதுவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுண்ணவெண்ணீ றணிமார்பிற்றோல்புனைந்
தெண்ணரம்பல்கணமேத்தநின்றாடுவார்
விண்ணவர்பைம்பொழில் வெள்ளடை மேவிய
பெண்ணமர்மேனியெம்பிஞ்ஞகனாரே

நல்லூர்ப்பெருமணம் வேண்டாகழுமலம்
பல்லூர்ப்பெருமணம் பாட்டுமெய்யாத்தில
சொல்லூர்ப்பெருமணஞ் சூடலரேதொண்டர்
நல்லூர்ப்பெருமணமேயநம்பானே

அன்புறுசிந்தையராகியடியவர்
நன்புறுநல்லூர் பெருமணமேவிநின்
இன்புறுமெந்தையிணையடி யேத்துவார்
துன்புறுவாரல்லர் தொண்டசெய்வாரே

காத லாகிக் கசிந்தகண் ணீர்மல்கி
ஒது வார்தமை நன்னெறிக் குய்ப்பதும்
வேத நான்கினு மெய்ப்பொரு ளாவது
நாதன் நாம நமச்சி வாயவே.

வரிய மறையார் பிறையார்
மலையோர் சிலையா வணங்கி
எரிய மதில்கள் எய்தார்
எறியு முசலம் உடையார்
கரிய மிடறும் உடையார்
கடவூர் மயானம் அமர்ந்தார்
பெரிய விடைமேல் வருவா
அவரெம் பெருமா னடிகளே

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிச் செய்த

## தேவாரப் பதிகங்கள்

# கோளறு பதிகம்

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள்கங்கை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

என்போடு கொம்பொடாமை இவைமார் பிலங்க
எருதேறி யேழை யுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
னுளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றொடேழு பதினெட் டொடாறும்
முடனாய நாள்க ளவைதாம்
அன்போடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

உருவளர் பவளமேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றைதிங்கள் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசைதெய்வ மான பலவும்
அருநெறி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிநுதல் மங்கையோடு வடபா லிருந்து
மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடுநோய்க ளான பலவும்
அதிகுணம் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

நஞ்சணி கண்டனெந்தை மடவாள்த னோடும்
விடையேறும் நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் உருமிடியு மின்னும்
மிகையான பூத மவையும்
அஞ்சிடும் நல்லநல்ல அவைநல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

வாள்வரி யதளதாடை வரிகோ வணத்தர்
மடவாள்த னோடு முடனாய்
நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி யுழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

செப்பிள முலைநன் மங்கையொரு பாகமாக
விடையேறு செல்வ னடைவார்
ஒப்பிள மதியுமப்பும் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும்வாத மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேள்பட விழிசெய்தன்று விடைமே லிருந்து
மடவாள்த னோடு முடனாய்
வாண்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரயன்ற னோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறு மெங்கள் பரமன்
சலம ளோடெருக்கு முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனுமாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேருநல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

கொத்தலர் சூழலியோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமும் மதியுநாக முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
புத்தரொ டமணைவாதி லழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவெ.

தேனமர் பொழில்கொளாலை விளைசெந்நெல் துன்னி
வளர்செம்பொ னெங்கும் நிகழ
நான்முக னாதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளுநாளு மடியாரை வந்து
நலியாத வண்ண முரைசெய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில்
அரசாள்வ ராணை நமதே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச் செய்த

### நான்காம் திருமுறை தொடக்கம் ஆறாம் திருமுறை வரை

திருச்சிற்றம்பலம்

கூற்றாயினவா றுவிலக் ககிலீர்
கொடுமைபலசெய்தனநானறியே
ஏற்றாயடிக்கேயிரவும்பகலும்
பிரியாதுவணங்குவனெப்பொழுதுந்
தோற்றாதென்வயிற்றினகம்படியேன்
குடரோடுதுடக்கிமுடக்கியிட
வாற்றேனடியேனதிகைக்கெடில
வீரட்டானத்துறையம்மானே

மாதப்பிறைக்கண்ணியானை
மலையான் மகளொடும்பாடிப்
போதொடு நீர்சுமந்தேத்திப்
புகுவாரவர்பின் புகுவேன்
யாதுஞ்சுவடுபடா மல்ஐயாறடைகின்றபோது
காதன் மடப்பிடியோடுங்களிறுவருவன கண்டேன்
கண்டேனவர்திருப்பாதங்
கண்டறியாதன கண்டேன்

சொற்றுணைவேதியன் சோதிவானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழ
கற்றுணைப் பூட்டியோர் கடலிற்பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசில்வீணையும் மாலைமதியமும்
வீசுதென்றலும் வீங்கிளவேனிலும்
மூசுவண்டறை பொய்கையும் போன்றதே
ஈசனெந்தையிணையடி நீழலே

பத்தனாய்ப்பாடமாட்டேன் பரமனேபரமயோகி
யெத்தினாற்பத்தி செய்கேனென்னை நீயிகழவேண்டாம்
முத்தனே முதல்வாதில்லையம் பலத்தாடுகின்ற
அத்தாவுன்னாடல் காண்பானடியேன் வந்தவாறே

பண்ணினேர் மொழியாளுமைபங்கரோ
மண்ணினார் வலஞ் செய்மறைக்காடரோ
கண்ணினாலுமைக்காணக்கதவினைத்
திண்ணமாகத்திறந்தருள் செய்ம்மினே.

அல்ல லென்செயு மருவினை யென்செயுந்
தொல்லை வல்வினைத் தொந்தந்தா னென்செயுந்
தில்லை மாநகர்ச் சிற்றம் பலவானர்க்
கெல்லை யில்லாதோ ரடிமைபூண் டேனுக்கே

நாடி நாரண நான்முக னென்றிவர்
தேடி யுந்திரிந் துங்காண வல்லரோ
மாட மாளிகை சூழ்தில்லை யம்பலத்
தாடி பாதமென் னெஞ்சு ளிருக்கவே

மதுர வாய்மொழி மங்கையோர் பங்கின்
சதுரன் சிற்றம் பலவன் றிருமலை
யதிர வார்த்தெடுத் தான்முடி பத்திற
மிதிகொள் சேவடி சென்றடைந் துய்மினே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனைக்கை மும்மத வேழ முரித்தவன்
நினைப்ப வர்மனங்கோயிலாகக் கொண்டவன்
அனைத்தும் வேடமா மம்பலக் கூத்தனைத்
தினைத்த னைப்பொழு தும்மறந் துய்வனே

தீர்த்த னைச்சிவனைச்சிவ லோகனை
மூர்த்தி யைமுத லாய வொருவனை
பார்த்த னுக்கருள் செய்தசிற் றம்பலக்
கூத்தனைக்கொடி யேன்மறந் துய்வனோ

நன்று நாடொறு நம்வினை போயறும்
என்று மின்பந் தழைக்க விருக்காலாஞ்
சென்று நீர்திரு வேட்களத் துள்ளுறை
துன்று பொற்சடை யானைத் தொழுமினே

கருப்பு வெஞ்சிலைக் காமனைக் காய்ந்தவன்
பொருப்பு வெஞ்சிலை யாற்புறஞ் செற்றவன்
விருப்பன் மேவிய வேட்களங் கைதொழு
திருப்ப னாகி லெனக்கிட ரில்லையே

விண்ணு ளார்தொழு தேத்தும்வி ளக்கினை
மண்ணு ளார்வினை தீர்க்குமருந்தினைப்
பண்ணு ளார்பயி லுந்திருக் கோளிலி
அண்ண லாரடி யேதொழு துய்ம்மினே

கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போது முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வனை
அப்போது மலர்தூவி யைம்புலனு மகத்தடக்கி
எப்போது மினியானை யென்மனத்தே வைத்தேனே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனமெனுந் தோணி பற்றி மதியெனுங் கோலையூன்றிச்
சினமெனுஞ் சரக்கையேற்றிச் செறிகட லோடும்போது
மதனெனும் பாறை தாக்கி மறியும்போ தறியவொண்ணா
துணையுனுமுணர்வைநல்கா யொற்றியூருடையகோவே

பூவினுங் கருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுங் கருங்கல மரனஞ் சாடுதல்
கோவினுங் கருங் கலங் கோட்டமில்லது
நாவினுங் கருங்கல நமச்சி வாயவே

அங்கத்தை மண்ணுக்காக்கி யார்வத்தை யுனக்கேதந்து
பங்கத்தைப் போகமாற்றிப் பாவித்தேன் பரமா நின்னைச்
சங்கொத்த மேனிச் செல்வா சாதனா ணாயேனுன்னை
எங்குற்றா யென்றபோதா விற்குற்றே னென்கண்டாயே.

காயமே கோயிலாகக் கடிமன மடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணி யிலிங்கமாக
நேயமே நெய்யும்பாலா நிறைநீ ரமையவாட்டிப்
பூசனையீ சனார்க்குப் போற்றவிக் காட்டினோமே

நமச்சி வாயவே ஞானமும் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்நெறி காட்டுமே.

விறகிற் றீயினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோனட் டுணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக்க டையமுன னிற்குமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்க ணானும் பிரமனுந் தம்முளே
எங்குந் தேடித்தி ரிந்தவர் காண்கிலர்
இங்குற் றேனென் றிலிங்கத்தே தோன்றினான்
பொங்கு செஞ்சடைப் புண்ணிய மூர்த்தியே

வேத நாயகன் வேதியர் நாயகன்
மாதி னாயகன் மாதவர் நாயகன்
ஆதி நாயக னாதிரை நாயகன்
பூத நாயகன் புண்ணிய மூர்த்தியே

நூறு கோடி பிரமர்க ளொங்கினார்
ஆறு கோடிநா ராயண ரங்ஙனே
ஏறு கங்கை மணலெண்ணி லிந்திரர்
ஈறி ராதவ னீசனொ ருவனே

நங்கையைப் பாகம்வைத்தார் ஞானத்தைநவிலவைத்தார்
அங்கையிலனலும் வைத்தாரானையினுரிவைவைத்தார்
தங்கையில்வாளும் வைத்தார் தாமரைமலரும் வைத்தார்
கங்கையைச்சடையுள் வைத்தார் கழிப்பாலைச்சேர்ப்பானாரே.

அங்கையுளனலும் வைத்தாரறுவகைச் சமயம் வைத்தார்
தங்கையில் வீணை வைத்தார் தம்மடிபரவ வைத்தார்
திங்களைக் கங்கையோடு திகழ்ந்தருசடையுள் வைத்தார்
மங்கையைப் பாகம் வைத்தார் மாமறைக் காடனாரே

விண்ணினார் விண்ணின்மிக்கார் வேதங்காணன்குமங்கம்
பண்ணினார் பண்ணின்மிக்கபாடலார் பாவந்தீர்க்குங்
கண்ணினார் கண்ணின்மிக்கநுதலினார் காமற்காய்ந்த
வெண்ணினா ரெண்ணின்மிக்காரிடை மருதிடங்கொண்டாரே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்கையைச் சடையுள்வைத்தார் கதிர்பொறியரவும் வைத்தார்
திங்களைத் திகழவைத்தார் திசைதிசைதொழவும்வைத்தார்
மங்கையைப் பாகம்வைத்தார் மான்மறிமழுவும்வைத்தார்
அங்கையுளனலும் வைத்தாரை யனை யாறனாரே.

பொடிதன்னைப்பூசவைத்தார் பொங்கு வெண்ணூலும்வைத்தார்
கடிய்தோர் நாகம்வைத்தார் காலனைக்காலில்வைத்தார்
வடிவுடைமங்கைதன்னை மார்பிலோர் பாகம்வைத்தார்
அடியினை தொழவும்வைத்தாரை யனை யாறனாயறே.

முற்றுனையாயினானை மூவர்க்கு முதல்வன்றன்னைச்
சொற்றுனையாயினானைச் சோதியை யாதரித்து
உற்றுணர்ந்துருகி யூறியுள் கசிவடையவர்க்கு
நற்றுனையாவர்போலு நனிபள்ளி யடிகளாரே.

எண்பதும்பத்துமாறு மென்னுளேயிருந்து மன்னிக்
கண்பழக்கொன்று மின்றிக்கலக்க நானலக்கழிந்தேன்
செண்டபகந்திகழும் புன்னைசெழுந்திரட்குரவம் வேங்கை
நண்புசெய் சோலைசூழ்ந்த நனிபள்ளியடிகளாரே.

பண்ணினார் பாடலாகிப் பழத்தினிலிரதமாகிப்
கண்ணினார் பார்வையாகிக் கருத்தொடுகற்பமாகி
எண்ணினா ரெண்ணமாகியே உலகனைத்துமாகி
நண்ணினார் வினைகடீப்பார் நனிபள்ளியடிகளாரே.

மனைவிதாய் தந்தைமகள் மற்றுளசுற்ற மென்னும்
வினையுளே விழுந்தழுந்தி வேதனைக்கிடமாகாதே
கனையுமாகடல் சூழ்நாகைமன்னு காரோணத்தானை
நினையுமாவல் லீராகிலுய்யலா நெஞ்சினீரே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாயினுங்கடைப்பட்டேனை நன்னெறி காட்டியாண்டாய்
ஆயிரமரவ மார்த்தவமுதனே யமுதமொத்து
நீயுமென்நெஞ்சினுள்ளே நிலவினாய் நிலாவிநிற்க
நோயவைசாருமாகி னோக்கிய நீயருள்செயாயே.

புழுவாய்ப்பிறக்கினும் புண்ணியாவுன்னடி யென்மனத்தே
வழுவாதிருக்க வரந்தரவேண்டு மிவ்வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள் செய்பாதிரிப்புலியூர்ச்
செழுநீர்ப்புனற் கங்கைசெஞ்சடைமேல் வைத்ததீ வண்ணனே

நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்கடம்பனைப் திருக்கரக் கோயிலான்
தன்கடன் னடியே னையுந்தாங்குதல்
என்கடன் பணிசெய்துகிடப்பதே.

திருச்சிற்றம்பலம்.

## திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த

# திருக்கைலாயப் பதிகம்

திருச்சிற்றம்பலம்

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சத்தத் தொலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேத மானாய் போற்றி
காற்றாகி யெங்குங் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிச்சாடல் பேயோ டுகந்தாய் போற்றி
பிறவி யறுக்கும் பிரானே போற்றி
வைச்சாடல் நன்று மகிழ்ந்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
பொய்சார் புரமூன்றும் மெய்தாய் போற்றி
போகதென் சிந்தை புகுந்தாய் போற்றி
கச்சாக நாக மசைத்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

மருவார் புரமூன்று மெய்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
உருவாகி யென்னைப் படைத்தாய் போற்றி
உள்ளாவி வாங்கி யொளித்தாய் போற்றி
திருவாகி நின்ற திறமே போற்றி
தேசம் பரவப் படுவாய் போற்றி
கருவாகி யோடும் முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

வானத்தார் போற்றும் மருந்தே போற்றி
வந்தென்றன் சிந்தை புகுந்தாய் போற்றி
ஊனத்தை நீக்கும் உடலே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
தேனத்தை வார்த்த தெளிவே போற்றி
தேவர்க்குந் தேவனாய் நின்றாய் போற்றி
கானத்தீ யாட லுகந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

ஊராகி நின்ற உலகமே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
பேராகி யெங்கும் பரந்தாய் போற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயராதென் சிந்தை புகுந்தாய் போற்றி
நீராவி யான நிழலே போற்றி
நேர்வா ரொருவரையு மில்லாய் போற்றி
தூராகி நின்ற முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

சில்லுருவாய் சென்று திரண்டாய் போற்றி
தேவ ரறியாத தேவே போற்றி
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
பல்லுயிராய் பார்தோறும் நின்றாய் போற்றி
பற்றி யுலகை விடாதாய் போற்றி
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

பண்ணின் இசையாகி நின்றாய் பொற்றி
பாவிப்பார் பாவ மறுப்பாய் போற்றி
எண்ணு மெழுத்துஞ்சொல் லானாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனுந்தீ யானாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

இமையா துயிராது இருந்தாய் போற்றி
என்சிந்தை நீங்கா இறவைா போற்றி
உமைபாக மாக தணைத்தாய் போற்றி
ஊழி யேழான வொருவா போற்றி
அமையா வருநஞ்ச மார்ந்தாய் போற்றி
ஆதி புராணனாய் நின்றாய் போற்றி
கமையாகி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூவாய் பிறவாய் இறவாய் போற்றி
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
தேவாதி தேவர்தொழுந் தேவே போற்றி
சென்றேறி யெங்கும் பரந்தாய் போற்றி
ஆவா அடியேனுக் கெல்லாம் போற்றி
அல்லல் நலிய அலந்தேன் போற்றி
காவாய் கனகத் திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

நெடிய விசும்பொடு கண்ணே போற்றி
நீள அகல முடையாய் போற்றி
அடியும் முடியு மிகலி போற்றி
அங்கொன் றறியாமை நின்றாய் போற்றி
கொடியவன்கூற்றம் உதைத்தாய் போற்றி
கோயிலா யென்சிந்தை கொண்டாய் போற்றி
கடிய உருமொடு மின்னே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

உண்ணாது உறங்காது இருந்தாய் போற்றி
ஓதாதே வேத முணர்ந்தாய் போற்றி
எண்ணா இலங்கைக்கோன் தன்னைப் போற்றி
இறைவிரலால் வைத்துகந்த ஈசா போற்றி
பண்ணா ரிசையின்சொல் கேட்டாய் போற்றி
பண்டேயென் சிந்தை புகுந்தாய் போற்றி
கண்ணா யுலகிற்கு நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுந்தரமூர்த்தி சுவாமிகளருளிச் செய்யப்பட்டது
## ஏழாந்திருமுறை

திருச்சிற்றம்பலம்.

பித்தாபிறைசூடிபெரு மானேயருளாளா
வெத்தான் மற வாதேநினைக்கின்றேன்மனத்துன்னை
வைத்தாய்பெண்ணை தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டுறையு
ளத்தாவுனக்காளாயின்யல்லேனெனலாமே

பொன்னார்மேனியனே புலித்தோலையரைக்கசைத்து
மின்னார்செஞ்சடைமேன்மிளிர் கொன்றையணிந்தவனே
மன்னேமாமணியே மழபாடியுண்மாணிக்கமே
அன்னேயுன்னையல்லாலினி யாரைநினைக்கேனே.

மற்றுப்பற்றெனக்கின்றிநின் றிருப்பாதமேமனம்பாவித்தேன்
பெற்றலும்பிறந்தேனினிப் பிறவாததன்மைவந்தெய்தினேன்
கற்றவர்தொழுதேத்துஞ் சீர்கரையூரிற்பாண்டிக்கொடுமுடி
நற்றாவுன்னைநான்மறக்கினுஞ் சொல்லுநமச்சிவாயவே

முத்தாமுத்திதரவல்லமகிழ்மென் முலையாளுமைபங்கா
சித்தாசித்தித்திறங்காட்டுஞ்சிவனே தேவர்சிங்கமே
பத்தாபத்தர்பலர் போற்றும்பரமா பழையனூர்மேய
அத்தாவாலங்காடா வுன்னடியார்க்கடியேனாவேனே

மருவார்கொன்றை மதிசூடி மாணிக்கத்தின் மலைபோல
வருவார் விடைமேல் மாதோடு மகிழ்ந்து பூதப்படைசூழத்
திருமால்பிரமனிந் திரற்குந் தேவர்நாகர்தான வர்க்கும்
பெருமான்கடவூர் மாயானத்துப் பெரியபெருமானடிகளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வாவதுமாயம்மி துமண்ணாவது திண்ணம்
பாழ்போவது பிறவிக்கடல் பசிநோய் செய்தபறிதான்
தாழாதறஞ் செய்மின்றடங் கண்ணான் மலரோனும்
கீழ்மேலுறநின்றான் திருக்கேதாரமேனீரே

நத்தார்படை ஞானன்பசுவேறிநனை கவிழ்வாய்
மத்தமத யானையுரி போர்த்த மணவாளன்
பத்தாகிய தொண்டர் தொழு பாலாவியின் கரைமேற்
செத்தாரெழும் பணிவான் றிருக்கேதீச்சரத்தானே

எங்கேனும்மிருந் துன்னடியேனுனை நினைந்தால்
அங்கேவந்தென்னொடு முடனாகி நின்றருளி
இங்கேயென் வினையறுத்திட்டெனையாளுங்
கங்காநாயகனே கழிப்பாலைமேயானே

பண்ணிடைத் தமிழொப்பாய்பழத் தினிற்சுவையொப்பாய்
கண்ணிடைமணியொப்பாய் கடுவிருட்சுடரோப்பாய்
மண்ணிடையடியார்கள் மனத்திடர் வாராமே
விண்ணிடைக் குருகாவூர் வெள்ளடை நீயன்றே

தில்லைவாழந்தணர் தமடியார்க்குமடியேன்
திருநீலகண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையேயென்னாதவியற்பகைக்குமடியேன்
இளையான்றன் குடிமாறனடியாதர்க்குமடியேன்
வெல்லுமாமிகவல்ல மெய்பொருளுக்கடியேன்
விரிபொழிலிசூழ்குன்றையார் விறன்மிண்டற்கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக்கடியேன்
ஆரூரனாரூரிலம்மானுக்காளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைவிலா நிறைவே குணக்குண்றே
கூத்தனே குழைக்காதுடையானே
உறவிலேனுனையன்றி மற்றடியேன்
ஒருபிழைபொருத்தா லிழிவுண்டோ
சிவண்டார்பொழில் சூழ்திருவாரூர்ச்
செம்பொனே திருவாவடுதுறையுள்
அறவனேயெனையஞ்ச லென்றருளாய்
ஆரெனக்குற வமரர்களேறே.

திருச்சிற்றம்பலம்.

## சுந்தரமூர்த்தி சுவாமிகளருளிச் செய்த தேவாரப் பதிகங்கள்

திருச்சிற்றம்பலம்

ஆலந்தான் உகந்து அமுது செய்தானை
ஆதியை அமரர் தொழுதேத்தும்
சீலந்தான் பெரிதும் உடையானைச்
சிந்திப்பார் அவர் சிந்தை உளானை
ஏலவார் குழலாள் உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப்பெற்ற
காலகாலனைக் கம்பன் எம்மானைக்
காணக்கண் அடியேன் பெற்றவாறே

உற்றவர்க்குதவும் பெரு மானை
ஊர்வதொன்றுடை யான் உம்பர் கோனைப்
பற்றினார்க் கென்றும் பற்றவள் தன்னைப்
பாவிப்பார் மனம் பாவிக் கொண்டானை
அற்றமில் புகழாள் உமை நங்கை
ஆதரித்து வழிபடப் பெற்ற
கற்றைவார் சடைக் கம்பன் எம்மானைக்
காணக்கண் அடியேன் பெற்றவாறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரியும் முப்புரந் தீப்பிழம்பாகச்
செங்கண் மால்விடை மேல் திகழ்வானைக்
கரியின் ஈருரி போர்த்துகந்தானைக்
காமனைக் கனலா விழித்தானை
வரிகொள் வெள்வளையாள் உமை நங்கை
மருவி ஏத்தி வழி படப்பெற்ற
பெரிய கம்பனை எங்கள் பிரனைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே.

குண்ட லம்திகழ காதுடை யானைக்
கூற்று தைத்த கொடுந்தொழிலானை
வண்டலம்பு மலர்க் கொன்றையினானை
வாளராமதிசேர் சடையானைக்
கொண்டையந்தடங் கண் உமை நங்கை
கெழுமி யேத்தி வழிபடப் பெற்ற
கண்டம் நஞ்சுடைக் கம்பனெம்மானைக்
காணக் கண்ணடியேன் பெற்றவாறே.

வெல்லும் வெண்மழு ஒன்றுடையானை
வேலை நஞ்சுண்ட வித்தகன் தன்னை
அல்லல் தீர்த்தருள் செய்ய வல்லானை
அருமறையவை அங்கம் வல்லானை
எல்லையில் புகழாளுமை நங்கை
யென்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
நல்ல கம்பனை எங்கள் பிரானைக்
காணக் கண்ணடியேன் பெற்றவாறே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திங்கள் தங்கிய சடையுடை யானைத்
தேவ தேவனைச் செழுங் கடல் வளரும்
சங்க வெண்குழைக் காதுடையானைச்
சாம வேதம் பெரிதுகப்பானை
மங்கை நங்கை மலைமகள் கண்டு
மருவி யேத்தி வழிபடப் பெற்ற
கங்கையாளனைக் கம்பனெம் பானைக்
காணக் கண்ணடியேன் பெற்றவாறே.

விண்ணவர் தொழுதேத்த நின்றானை
வேதம் தான் விரித்து ஓதவல்லானை
நண்ணினார்க் கென்றும் நல்லவன் தன்னை
நாளும் நாம் உகக்கின்ற பிரானை
எண்ணில் தொல்புகழாள் உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கண்ணும் மூன்றுடைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்ற வாறே.

சித்தித் தென்றும் நினைந்தெழுவார்கள்
சிந்தையில் திகழும் சிவன் தன்னைப்
பந்தித்தவினைப் பற்றறுப் பானைப்
பாலொடானஞ்சும் ஆட்டுகந் தானை
அந்தமில் புகழாள் உமை நங்கை
ஆதரித்து வழிபடப் பெற்ற
கந்தவார் சடைக்கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரங்கள் பெற்றுழல் வாள ரக்கர் தம்
வாலிய புரம் மூன்றெரித் தானை
நிரம்பிய தக்கன் தன்பெரு வேள்வி
நிரந்தரஞ் செய்த நிர்கண்டகனைனப்
பரந்த தொல்புகழாள் உமைநங்கை
பரவி ஏத்தி வழிபடப் பெற்ற
கரங்கள் எட்டுடைக் கம்பன் எம்மானைக்
காணக் கண் அடியேன் பெற்றவாறே.

எள்கல் இன்றி இமையவர் கோனை
ஈசனை வழிபடு செய்வார் போல்
உள்ளத் துருகி உகந்துமை நங்கை
வழிபடச் சென்று நின்றவா கண்டு
வெள்ளங் காட்டி வெருட்டிட அஞ்சி
வெருவி ஓடித் தழுவ வெளிப்பட்ட
கள்ளக் கம்பனை எங்கள் பிரானைக்
காணக் கண் பெற்றவாறே.

பெற்றம் ஏறுக தேறவல் லானைப்
பெரிய எம்பெருமான் என்றெப்போதும்
கற்றவர் பரவப்படு வானைக்
காணக் கண் அடியேன் பெற்றதென்று
கொற்றவன் கம்பன் கூத்தன் எம்மானைக்
குளிர்பொழில் திருநாவல் ஆருரன்
நற்றமிழ் இவை ஈரைந்தும் வல்லர்
நன்நெறி உலகெய்துவர் தாமே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணிக்கவாசக சுவாமிகளருளிச் செய்த

# திருவாசகம்

### எட்டாம்திருமுறை

**அடைக்கலப்பத்து**

**பக்குவ நிண்ணயம்**

**திருப்பெருந்துறையில் அருளிச் செய்யப்பட்டது**

**கலவைப் பாட்டு**

திருச்சிற்றம்பலம்

செங்கமலத் திரளனநின் சேவடிசேர்ந்த மைந்த
பழுத்தமனத் தடியருடன் போயினர்யான் பாவியேன்
புழுக்கனுடைப் புன்குரம்பைப் பொல்லாக் கல்வி ஞானமிலா
வழுக்குமனத் தடியேன் உடையாய்உன் அடைக்கலமே.

வெறுப்பனவே செய்யும்என் சிறுமையைநின் பெருமையினாற்
பொறுப்பவ னேஅராப் பூண்பவ னேபொங்கு கங்கைசடைச்
செறுப்பவ னேநின் திருவரு ளால்என் பிறவியைவேர் அறுப்பவ னேஉடை
யாயடி யேன்உன் அடைக்கலமே.

பெரும்பெரு மான்என் பிறவியை வேரறுத் துப்பெரும்பிச்சுத்
தரும்பெரு மான்சது ரப்பெரு மான்என் மனத்தினுள்ளே
வரும்பெரு மான்மல ரோன்நெடு மாலறி யாமல்நின்ற
அரும்பெரு மான்உடை யாய்அடி யேன்உன் அடைக்கலமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழிகின்ற துன்பப் புயலவெள்ளத் தில்நின் கழற்புணைகொண்டு
டிழின்றவன்பர்கள் ஏறினர் வான்யான் இடாக்கடல்வாய்ச்
சுழிசென்ற மாதர்த் திரைபொரக் காமச் சுறவெறிய
அழிகின் றனனுடை யாய்அடி யேன்உன் அடைக்கலமே.

சுருள்புரி கூழையா சூழலிற் பட்டுன் திறம்மறந்திங்
கிருள்புரி யாக்கையி லேகிடந் தெய்த்தனன் மைத்தடங்கன்
வெருள்புரி மான்அனன் நோக்கிதன் பங்கவிண் ணோர்பெருமான்
அருள்புரி யாய்உடை யாய்அடி யேன்உன் அடைக்கலமே.

மாழைமைப் பாவிய கண்ணியர் வன்மத திடவுடைந்து
தாழியைப் பாவு தயிர்போற் றளர்ந்தேன் தடமலர்த்தாள்
வாழியெப் போதுவந் தெந்நாள் வணங்குவன் வல்வினையே
ஆழியப் பாவுடை யாய்அடி யேன்உன் அடைக்கலமே.

மின்கணினார் நுடங்கும் இடையார் வெகுளிவலையில் அகப்பட்டுப்
பண்கண ணாய்ப்புரள்வேனைப் புரளாமற்புகுந்தருளி
என்கணிலே அமுதூறித் தித்தித்தென் பிழைக்கிரங்கும்
மங்கணனே உடையாய் அடியேன்உன் அடைக்கலமே.

மாவடு வகிரன்ன கண்ணிபங் காநின் மலரடிக்கே
கூவிடுவாய் கும்பிக் கேயிடு வாய்நின் குறிப்பறியேன்
புாவிடை யாடு குழல்போற் கரந்து பரந்துள்ள
மாகெடு வேன்உடை யாய்அடி யேன்உன் அடைக்கலமே.

பிறிவறி யாஅன்பர் நின்அருட் பெற்கழல் தாளினைக்கீழ்
மறிவறி யார்செல்வம் வந்துபெற் றார்உன்னை வந்திப்பதோர்
நெறியறி யேன்நின்னை யேஅறி யேன்நின்னை யேஅறியு
மறிவறி யேன்உடை யாய்அடி யேன்உன் அடைக்கலமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழுங்ககின் றாய்க்குன் அருளா ரமுதத்தை வாரிக்கொண்டு
விழுங்குகின்றேன் விக்கி னேன்வினை யேஎன் விதியின்மையாற்
தழுங்கருந் தேனன்ன தண்ணீர் பருகத்தந் துய்யக்கொள்ளா
அழுங்குகின் றேன்உடை யாய்அடி யேன்உன் அடைக்கலமே.

மெய்தானரும்பி விதிர்விதிர்த் துன்விரையார்கழற்கென்
கைதான்றலைவைத்துக் கண்ணீர்ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான்றவர்த்துன்னைப்போற்றிசயசய போற்றியென்னுங்
கைதானெகிழவிடேனுடை யாயென்னைக் கண்டுகொள்ளே

கடையவனே கருனையினாற் கலந்தாண்டுகொண்ட
விடையவனே விட்டிடுதிகண்டாய் விறல் வேங்கையின்றோ
லுடையவனே மன்னுமுத்தரகோசமங்கைக்கரசே
சடையவனே தளர்ந்தேனெம்பிரானென்னைத் தாங்கிக்கொள்ளே.

பூவேறுகோனும் புரந்தனும் பொற்பமைந்த
நாவேறுசெல்வியுநாராயணனுநான்மறைய
மாவேறுசோதியும் வானவருந்தாமறியாச்
சேவேறு சேவற்கேசென்று தாய்கோத்தும்பீ

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயன் மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டெண்னை
ஈசனவவெவ்வுயிர்க்குமியல்பானான் சாழலோ.

முக்திநெறியறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பக்திநெறியறிவித்துப்பழவினைகள் பாறும் வண்ணஞ்
சித்தமலமறுவித்துச் சிவமாக்கியெனையாண்ட
அத்தனெனக்கருளியவாறார் பெறுவார்ரச்சோவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரொடுவிண்ணாய்ப்பரந்த வெம்பரனே
பற்றுநான்மற்றிலேன் கண்டாய்
சீரொடுபொலிவாய சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறைசிவனே
ஆரொடுநோகேனார்க் கெடுந்துரைக்கே
னாண்டநீயருளிலையானால்
வார்கடலுலகில்வாழ்கிலேன் கண்டாய்
வருகவென்றருள் புரிவாயே

சோதியே சுடரே சூழொளிவிளக்கே
சுரிகுழற்பணை முலைமடந்தை
பாதியேபரனே பால்கொள்வெண்ணீற்றா
பங்கயத்தயனு மாலறியா
நீதியே செல்வத்திருப் பெருந்துறையின்
நிறைமலர்க் குருந்தமேவியசீர்
ஆதியே அடியேனாதரித் தழைத்தால்
அதெந்துவேயென்றருளாயே

அம்மையேயப்பா ஒப்பிலாமணியே
அன்பினில் விளைந்தவாரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையேன்றனக்குச்
செம்மையேயாயசிவபதமளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையேயுன்னைச் சிக்கெனப்பிடித்தேன்
எங்கெழுதருளுவதினியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானேதும் பிறப்பஞ்சே னிறப்பதனுக் கென்கடவேன்
வானேயும் பெறில்வேண்டேன் மண்ணாள்வான்மதித்துமிரேன்
றேனேயுமலர்க்கொன்றைச் சிவனேயெம் பெருமானெம்
மானேயுன் னருள்பெறுநா ளென்றென்றே வருந்துவனே

பிணியெல்லாம் வரினு மஞ்சேன் பிறப்பினோடிறப்பு மஞ்சேன்
றுணிநிலா வணியினான்றன் றொழும்பரோடழுந்தியம்மால்
றணிநிலதிம் பிளந்துங் காணாச் சேவடி பரவி வெண்ணீ
றணிகிலா தவரைக் கண்டா லம்மநா மஞ்சு மாரே

உற்றாரை யான் வேண்டேன் னூர் வேண்டேன் பேர் வேண்டேன்
கற்றாரையான் வேண்டே கறடபனவு மினியமையுங்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாவுன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவேனே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்பதாந்திருமுறை

# திருவிசைப்பா

சிவபெருமானது சிறந்த பொருள்சேர் புகழைக்கூறும் அருட்பா திருவிசைப்பா எனப்படும். இதன் பழைய பெயர் "திருவிசைப் பாமாலை" என்பது. கருவூர்த்தேவர், சேந்தனார் உட்பட ஒன்பதின்ம ரால் அருளிச்செய்யப்பட்டது. இதில் 28 பதிகங்களும், 301 பாடல் களும் அடங்கும். அதில் 15 பதிகங்கள் சிதம்பரத்தின் புகழ் கூறுவன.

### திருச்சிற்றம்பலம்

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே!

ஏகநா யகனை இமயவர்க் கரசை
என்னுயிர் காரமுதினை எதிரில்
போகநா யகனைப் புயல்வண்ணற் கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையா வூர்ந்த
மேகநா யகனை மிகுதிரு வீழி
மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்
யோகநா யகனை யன்றிமற் றொன்றும்
உண்டென உணர்கிலேன் யானே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறிழயா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந்தனவே

தனதனற் றோழா சங்கரா சூல
பாணியே தாணுவே சிவனே
கனகநற் றூணே கற்பகக் கொழுந்தே
கண்கள்மூன் றுடையதோர் கரும்பே
அனகனே குமர விநாயக சனக
வலம்பலத் தமரசே கரனெ
உனகழ லினையென் னெஞ்சினு ளினிதாத்
தொண்டனே னுகருமா நுகரே

மாலுலாமனந்தந் தென்கையிற் சங்கம்
வவ்வினான் மலைமகள் மதலை
மேலுாலார் தேவர் குலமுழுதாழுங்
குமரவேள் வள்ளிதன் மணாளன்
சேலுலாங்கழனித் திருவிடைகழியிற்
றிருக்கு ராநீழற் கீழ்நின்ற
வேலுலாந்தடக்கை வேந்தனென்
சேர்ந்தனென்னுமென் மெல்லியலிவளே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடர்கெடுத் தென்னை யாண்டுகொண் டென்னுள்
இருட்பிழம் பறவெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கி னுள்ளொளி விளங்குந்
தூயநற் சோதியுட் சோதீ
அடல்விடைப் பாகா வம்பலக் கூத்தா
அயனோடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்து நின் றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே.

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக் கண்ணுடைய தோர் நெருப்பே
வேறணிபுவன போகமே யோக
வெள்ளமே மேருவில்வீரா
ஆறணி சடையெம் மற்புதக்கூத்தா
அம்பொன் செயஅமபலத்தரசே
ஏறணி கொடியெம் மீசனேயுன்னைத்
தொண்டனே னிசையுமாறிசையே.

புவனநாயகனே யகவுயிர்க்கமுதே
பூரணாவாரணம் பொழியும்
பவளவாய்மணியே பணிசெய்வார்க்கிரங்கும்
பசுபதீபன்ன காபரணா
அவனிஞாயிறுபோன்றருள் புரிந்தடியே
னகத்திலுமுகத்தலை மூதூர்த்
தவளமாமணிப்பூங்கோயிலு மமர்ந்தாய்
தனியனேன்றனிமை நீங்குதற்கே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைக்கடம் பொருளும் அறிவுமாய் என்னைக்
கற்பினிற் பெற்றெடுத்தெனக்கே
முலைகடந் தருளுந் தாயினும் நல்ல
முக்கணான் உறைவிடம் போலும்
மலைகுடைந் தனைய நெடுநிலை மாட
மருங்கெலாம் மறையவர்முறையோத்
தலைகடல் முழங்கும் அந்தண் நீர்க் களந்தை
அணிதிகழ் ஆதித்தேச் சரமே.

பவளமே மகுடம் பவளமே திருவாய்
பவளமே திருவுடம் பதனில்
தவளமே களபம் தவளமே புரிநூல்
தவளமே முறுவல் ஆடரவந்
துவளுமே கலையும் துகிலுமே யொருபால்
துடியிடை இடமருங் கொருத்தி
அவளுமே ஆகில் அவரிடங் களந்தை
அணிதிகழ் ஆதித்தேச் சரமே.

தெள்ளுநீ றவன் நீ றென்னுடல்விரும்பும்
செவியவன் அறிவுநூல் கேட்கும்
மெள்ளவே அவன்பேர் விளம்பும்வாய் கண்கள்
விமானமே நோக்கிவெவ் வுயிர்க்கும்
கிள்ளை பூம் பொதும்பிற் கொஞ்சிமாம் பொழிற்கே
கெழுவுகம்பலை செய்கீழ்க் கோட்டூர்
வள்ளலே மணியம் பலத்துள் நின்றாடும்
மைந்தனே என்னமென்மனனே.

திருசிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேந்தனார் பாடியருளிய

## ஒன்பதாந்திருமுறை

# திருப்பல்லாண்டு

சிதம்பரத்தில் ஒரு மார்கழித் திருவாதிரைத் திருவிழாவில் தேர்ச்சில்லுகள் சேற்றில் புதைந்து நகராது தம்பித்து நின்ற சமயத்தில் சேந்தனார் திருப்பல்லாண்டு எனும் திருப்பதிகத்தைப் பாடியருளினார். தேர் தானாகவே வீதி வலம் வந்து இருப்பைச் சென்றடையச் செய்தார் என்பது வரலாறு. இந்தியாவில் சிதம்பரம் இலங்கையில் திருக்கேதீஸ்வரம் கோயில்களிலும் தேர்த் திருவிழா வன்று திருப்பல்லாண்டு பாடித் தேர் இழுப்பது மரபாகவுள்ளது.

திருச்சிற்றம்பலம்

மன்னுக தில்லை வளர்கநம் பக்தர்கள்
வஞ்சகர்போ யகலப்
பொன்னின் செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல் லாம்விளங்க
அன்னநடை மடவா ளுமைகோ னடியோ
முக்கருள் புரிந்து
பின்னைப்பிற வியறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சில தேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரண்மேரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடங்கண் விடைப் பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கட லீந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

மீண்டு மனத்தவர் போமின்கன மெய்யடியார்கள்
விரைந்து வம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி யீசற்காட்
செய்மின் குழாம்புகுந
தண்டங் கடந்த பொருளள வில்லாதோ
ரானந்த வெள்ளப்பொருள்
பண்டு மின்றுமென்று முள்ளபொரு ளென்றே
பல்லாண்டு கூறதுமே

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமூல நாயனாரால் அருளிச் செய்யப்பட்ட

## பத்தாம் திருமுறை

# திருமந்திரம்

திருக்கயிலாயத்தின் நந்திதேவரின் திருவருள் பெற்ற சிவயோகி ஒருவர் அங்கிருந்து பொதிகை மலையில் எழுந்தருளியிருக்கும் அகத்திய மாமுனிவரிடம் செல்லும் பொருட்டு வந்தபோது, சாத்தனூரில் ஓர் மேச்சலத் தரையில் பல பசுக்கள் குழுமி நின்று கதறி அழுவதைக் கண்டார். அவைகளின் மேய்ப்பனாகிய மூலன் என்னும் இடையன் இறந்திருப்பதைக் கண்டு அவனின் “உடலில்” **பரகாயப் பிவேசம்** என்ற சித்தியினால் தன் உயிரைச் செலுத்தி எழுந்து பசுக்களை உரியவீடுகளுக்குச் ஓட்டிச் சென்று சேர்பித்தார். பின்பு திருவாவடுத்துறைச் சிவன் கோயில் மேற்குப் பிரகாரத்தில் நின்ற அரச மரத்தின் கீழ் இருந்து தவம் செய்து பாடிய 3000 பாடல்களே திருமந்திரமாகும். மூலனின் உடலிலிருந்த மையால் திருமூலர் என்ற பெயரும் ஏற்பட்டது.

திருச்சிற்றம்பலம்

அன்புஞ்சிவமு மிரண்டென்பரறிவிலார்
அன்பேசிவமாவதாரு மறிகிலார்
அன்பேசிவமாவதா ருமறிந்தபின்
அன்பேசிவமாயமர்ந் திருப்பாரே

ஐந்த கரத்தனை யானை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலுமெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக்கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்று கின்றேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவர்க்கு மாமிறை வற்கொரு பச்சிலை
யாவர்க்கு மாம்பசு வுக்கொரு வாயுறை
யாவர்க்கு மாமண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்கு மாம்பிறர்க் கின்னுரை தானே

சிவசிவ வென்கிலர் தீவினை யாளர்
சிவசிவ வென்றிடத் தீவனை மாளுஞ்
சிவசிவ வென்றிடத் தேவரு மாவர்
சிவசிவ வென்னச் சிவகதி தானே

குருவே சிவமெனக் கூறினேன் நந்தி
குருவே சிவமென் பதுகுறித் தோரார்
குருவே சிவனுமாய்க் கோனுமாய நிற்கும்
குருவே யுரையுணர் வற்றதோர் கோவே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதினோராந் திருமுறை

திருச்சிற்றம்பலம்

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைதணி விப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணற் பணிமின் கனிந்து.

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தங் கை.

முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே – ஒரு கைமுகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்.

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புராணம்

### விநாயகக்கடவுள்

### விருத்தம்

திருச்சிற்றம்பலம்

மண்ணலகத்தினிற் பிறவிமாசற
எண்ணியபொருளெலா மெளிதின்முற்றுறக்
கண்ணுதலுடையதோர் களிற்றுமாமுகப்
பண்ணவன்மலரடிப் பணிந்து போற்றுவாம்.

திருவுங்கல்வியுஞ் சீருந்தழைக்கவுங்
கருணைபூக்கவுந் தீமையைக்காய்க்கவும்
பருவமாய்நமதுள்ளம் பழுக்கவும்
பெருகுமாழத்துப் பிள்ளையைப் பேணுவோம்.

நல்லசொற்பொருணாளுநடாத்தவும்
எல்லைகாணரும் பேரின்பமெய்தவும்
வெல்லும்யானை முகத்தினை மேவிவாழ்
வல்லபைக்குரியானை வாழ்த்துவோம்

உள்ளமெனுங் கூடத்திலூக்கமெனுந்
தறிநிறுவியுறுதியாகத்
தள்ளரியவன் பென்னுந்தொடர்பூட்டி
யிடைப்படுத்தித் தறுகட்பாசக்
கள்ளவினைப்பசு போதக்கவளமிடக்
களித்துண்டுகருணை யென்னும்
வெள்ளமதம் பொழிசித்திவேழத்தை
நினைந்துவரு வினைகடீர்ப்பாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானுலகும் மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்ய தமிழ் பார்மிசை விளங்க
ஞானமத வைந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுக னைப்பரவி யஞ்சலிசெய் கிற்பாம்.

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணகிரிநாத சுவாமிகளால் அருளப்பட்ட

# திருப்புகழ்

## ஆறுமுகக் கடவுள் துதி

(திருவருனை)

திருச்சிற்றம்பலம்

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகமொன்றே
கூறுமடியார்கள் வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளிய மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசல மமர்ந்த பெருமாளே.

திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

தத்தன தனதன தத்தன தனதன
தத்தன தனதன தனதான

கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொறி
கப்பிய கரிமுக னடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியி லுறைபவர்
கற்பக எனவினை கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புர மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டவிழ் மலர்கொடு பணிவோனே
முத்தமி ழடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புரம் எரிசெய்த அச்சிவ னுறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மனிதடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

## சுப்பிரமணிய துதி

தத்தத்தன தத்தத்தனதன
தத்தத்தன தத்தத்தனதன
தத்தத்தன தத்தத்தனதன தனதான

முத்தைத்தரு பத்தித்திருநகை
அத்திக்கிறை சத்திச்சரவண
முத்துக்கொரு வித்துக்குருபரனெனவோதும்
முட்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித்திருவரு
முப்பத்துமு வர்க்கத்தமரரூமடிபேணப்
பத்துத்தலை தத்தக்கணைதொடு
ஒற்றைக்கிரி மத்தைப்பொருதொரு
பட்டப்பகல் வட்டத்திகிரியி லிரவாக
பத்தற்கிர தத்தைக்கடவிய
பச்சைப்புயல் மெச்சத்தகுபொருள்
பச்சத்தொடு ரக்ஷித்தருளுவது ஒரு நாளே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தித்தித்தய ஒத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப்பயிரவி
திக்கொட்க நடிக்கக் கழுகொடு கழுதாடத்
திக்குப்பரி அட்டப் பயிரவர்
தொக்குத்தொகு தொக்குத் தொகுதொகு
சித்ரப்பவுரிக் த்ரிகடக என ஓத
கொத்துப்பறை கொட்டக்களமிசை
குக்கு குகுகுக்கு குகுகுகு
குத்திப்புதை புக்குப்பிடியென முதுகூகை
கொட்புற்றெழு நட்பற்றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக்குலகிரி
குத்துப்பட ஒத்துப் புரவல பெருமாளே.

## வாழ்த்து

திருச்சிற்றம்பலம்

நமப் பார்வதி பதையே
ஹர ஹர மகா தேவா

தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி

பராய்த்துறை மேவிய பரனே போற்றி
சீராய் பள்ளி மேவிய சிவனே போற்றி

காவாய் கனகத்திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

கண்மேலும் கண்ஒன்று உடையாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஔவையார் அருளிய

# விநாயகர் அகவல்



**ஆசிரியப்பா**

திருச்சிற்றம்பலம்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன் அரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்ப
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்

வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்

இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே!
முப்பழம் நுகரும் மூசிக வாகன!

இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருந்திய முதலைந் தெழுந்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து

குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்

தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து

தலமொரு நான்கும் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்குச நிலையும்

பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழிமுனைக் கபாலமுங் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்

குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்து மூண்டெழு கனலைக்
கலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்
சண்முக தூலமுஞ் சதுர்முக சூட்மமும்
எண்முக மாக இனிதெனக் கருளி

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித் தெனக்கருள் செய்து

முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி யிரண்டும் ஒன்றிடமென்ன
அருள்தரும் ஆனந்தத் தழுத்திஎன் செவியில்

எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத் தினுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத்தி னுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவுக் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்

கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்

தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக! விநாயக! விரைகழல் சரணே.

திருச்சிற்றம்பலம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

## மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய

# சிவபுராணம்



திருவாசகச் சிறப்பு
திருச்சிற்றம்பலம்

தொல்லை யிரும்பிறவிச் சூழும் தளைநீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம் என்னுந் தேன்.

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவன் அடி வாழ்க

வேகம் கெடுத் தாண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உண் மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம் குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈசன் அடி போற்றி எந்தை அடி போற்றி
தேசன் அடி போற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடி போற்றி

ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஒய உரைப் பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார்கழல் இறைஞ்சி
விண்நிறைந்து மண் நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறைந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்ற இத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய் ஆயின எல்லாம் போய் அகல வந்தருளி
மெஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவிறுதி யில்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம் கழிய நின்றமறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழு அழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள்ளுருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் கிடந்த அடியேற்குத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசம் ஆம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கினன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனேஓ என்றென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நல்லிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற்க ரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பள்ளியெழுச்சி

திருச்சிற்றம்பலம்

போற்றிஎன் வாழ்முதலாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணை துணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகந் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலரும்தண்வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
ஏற்றுயர் கொடியுடையாய் எனைஉடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தருளாயே.

அருணன்இந்திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம்நின்மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலர மற்றஅண்ணல்அம் கண்ணாம்
திரள்நிரை அறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகடலே பள்ளி எழுந்தருளாயே

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்:
ஓவின தாரகை யொளிஒளி உதயத்து
ஒருப்படுகின்றது விருப்பொடு நமக்கு
தேவநற் செறிகழறட றாளிணை காட்டாய்!
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யபவரும் அறிவரி யாய்எமக் கெளிவாய்
எம்பெருமான் பள்ளி எழுந்ததருளாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னிசை வீணையார் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறையுறை சிவபெருமானே
என்னையும் ஆண்டுகொண்டின்னருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தருளாயே.

பூதங்கள் தோறும்நின் றாயெனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப்பெருந்துறை மன்னா
சிந்தனைக்கும் அரியாய் எங்கள முன்வந்து
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்பள்ளி எழுந்தருளாயே.

பப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகி றார்அணங்கின்மன வாளா
செப்புறு கமலங்கள் மலர்ந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே.

அது பழச்சுவையென அமுதென அறிதற்கு
அரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவனவன் எனவே
எங்களை ஆண்டுகொண்டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திருவுத்தர கோசமங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள் ளாய்திருப்பெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொளுமாறது கேட்போம்
எம்பெரு மான்பள்ளி எழுந்தருளாயே.

முந்திய முதல்நடு இறுதியு மானாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயும்நின் அடியார்
பழங்குடில் தோறும்எழுந்தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
அந்தண னாவதங் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி எழுந்தருருளாயே.

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டார்
விழுப்பொரு ளேயுன தொழும்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறையாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாய்உலகுக்குயி ரானாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தருளாயே.

புவனியிற் போய்ப்பிறவாமையில் நாள்நாம்
போக்குகின் றொம் அவதேஇந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்றவாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப் படவும்
நின் அலர்ந்தமெய்க்கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி எழுந்தருளாயே.

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவண்ணாமலையில் அருளியச் செய்த

# திருவெம்பாவை

திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருச்
சோதியை யாம்பாடக் கேட்டேயுஞ் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் பேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேயென்னே
ஈதே எம்தோழி பரிசேலோர் எம்பாவாய். 1

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல் நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையும் சிலவோ விளையாடி
ஏசும் இடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பர்யாம் ஆரேலோ ரெம்பாவாய். 2

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன்என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன்பழ அடி யீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய்.3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய். 4

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமம் பாடிச் சிவனே சிவனே என்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய். 5

மானே நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும்எமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய்
6

அன்னே இவையுஞ் சிலவோ பலஅமரர்
உன்னற்கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். 7

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ
வாழிஈ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய். 8

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் போர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர் பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய். 9

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலத்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை யொருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்யொரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒரு தோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்தன் கோயில் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். 10

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்நதோங்காண் ஆரழல்போற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யாவெண் ணீறாடிச் செல்வா சிறுமருங்குல்
மைனார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண்டருளும் விளையாட்டில்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோ ரெம்பாவாய். 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தன்இவ் வானுங் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய். 12

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலக்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைத்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 13

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடிப்
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய். 14


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியான்
பேரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தான்
வாருருவப்பூண்முலையீர் வாயார நாமடபாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.15

முன்னிக் கடலைச் சுருக்கியெழுந் துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய். 16

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நம்தெம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 17

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்யொர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாம் அகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிர்சேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணார் இமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெணணேஇப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.
18

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்என்று
அங்கு அப்பழஞ்சொற் புதுக்கும்எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லாதோர் சேரற்க
எங்கை உனக்கல்லாதெப்பணியஞ் செய்யற்க
கங்குல் பகல்எம்கண் நல்குதியேல்
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயிறு றெமக்கேலோ ரெம்பாவாய்.
19

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றிஎல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்.

20

திருச்சிற்றம்பலம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தில்லையில் அருளிச் செய்த

# திருப்பொற்சுண்ணம்

ஆனந்த மனோலயம்

**(மனம் ஆனந்தத்திலே லயப்படுந் தன்மை)**

**அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்**

முத்துநல் தாழம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம்வைம்மின்
சக்தியும் சோமியும் பார்மகளும்
நாமகளோடுபல்லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன் ஐயாறன்அம்மானைபாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே. 1

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்ன கண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நிலாமே
குனிமின் தொழுமினெங் கோனெங்கூத்தன்
தேவியுந் தானும்வந்தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே. 2

சுந்தர நீறணந் தும்மெழுகித்
தூயபொன்சிந்தி நிதிநிரப்பி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தார் கோன்அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாலை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்
ஏய்ந்த பொற்சுண்ணம் இடித்துநாமே. 3

காசணி மின்கள் உலக்கையெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேசமுடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழ்த்தித்
தேசமெல்லாம் புகழ்ந் தாடுங் கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாசவினையைப் பறிந்துநின்று
பாடிப் பொற்சுண்ணம் இடித்துநாமே. 4

அறுகெடுப்பார் அயனும்அரியும்
அன்றிமற்றிந்திர னோடமரர்
நறுமுது தேவர்கணங்கெளெல்லாம்
நம்மிற்பின் பல்லதெடுக்க வொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கணஅப்பதற்கு
ஆடப்பொற்சுண்ணம் இடித்துநாமே. 5

உலக்கை பலஒச்சு வார்பெரியர்
உலகமெலாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடந்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி மகிழ்ந்து
பொற்சுண்ணம் இடிந்தும்நாமே. 6

சூடகந் தோள்வரை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்பப்
பாடக மெல்லடி யார்க்கு மங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்னகோவுக்
காடப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே. 7

வாள்தடங்கண்மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கைபொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரானென்று சொல்லிச்சொல்லி
நாட்கோண்ட நாண்மலர்ந் பாதங்காட்டி
நாயிற் கடைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே. 8

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதரு தென்னன் பெருந்துறையான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற்சுண்ணம் இடித்தும்நாமே. 9

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்
செங்கயற் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொ டாடஆட
ஆடப்பொற்சுண்ணம் இடித்தும்நாமே. 10

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெருமானைத்தேடி
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்
ஆடப்பொற்சுண்ணம் இடித்தும்நாமே. 11

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்தன்னை
ஐயனை ஐயர்பிரானைநம்மை
அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர் தம் பொய்யனை மெய்யர் மெய்யைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதரிக் கண்ணினைப் பொற்றொடித்தோள்
பையரா வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப் பொற்சுண்ணம் இடித்தும்நாமே. 12

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமுதெங்களப்பன்
எம்பெருமான் இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன்தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச்சுண்ணம் இடித்தும்நாமே. 13

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாயிதழுந்துடிப்பச்
சேயிழை யீர் சிவலோகம் பாடிக்
கங்கை இரைப்ப அராஇரைக்குங்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச்சுண்ணம் இடித்தும்நாமே. 14

ஞானக் கரும்பின் தெளியைப் பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்துதித் திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பானல் தடங்கண் மடந்தைநல்லீர்
பாடிப்பொற்சுண்ணம் இடித்தும்நாமே. 15

ஆவகை நாமும் வந்தன்பர்தம்போ
ஆட்செய்யும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர் கனாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ் செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான் புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடிச்
செம்பொன் செய்சுண்ணம் இடித்தும்நாமே. 16

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்யஅன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிச்சுண்ணம் இடித்துநாமே. 17

அயன்தலை கொண்டுசெண்டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடி
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல் பாடி
காலனைக்காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதற்குச் சுண்ணம் இடித்தும்நாமே. 18

வட்டமலர்க்கொன்றை மாலைபாடி
மத்தமும்பாடி மதியம்பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம் பலத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக்கச்சைப் பாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டுநின் றாடும் அரவம்பாடி
ஈசற்குச்சுண்ணம் இடித்தும்நாமே. 19

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதிய மாய் இருள் ஆயினார்க்குத்
துன்பமுமாய் இன்பம் ஆயினார்க்குப்
பாதியு மாய் முற்றும் ஆயினார்க்குப்
பந்தமு மாய் வீடும் ஆயினார்க்கு
ஆதியும் அந்தமும் ஆயினார்க்கு
ஆடப்பொற்சுண்ணம் இடித்தும்நாமே. 20

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மந்திர வழிபாடு

1. 'எந்த தெய்வத்தை நோக்கி நீ எந்த மந்திரம் ஜெபித்தாலும் அவற்றை வாங்கிக் கொள்பவள் நான் தானடா மகனே!' என்பது நம் அன்னையின் அருள்வாக்கு. இக்கலியுகத்தில் அவள் 1008, 108 மந்திரங்கள், வேண்டுதற்கூறு ஆகியவற்றில் தன் அருள் சக்தியைத் தேக்கி இந்த அவதார காலத்தில் கருணையோடு நமக்கு வழங்கியிருக்கிறார்கள். நாள்தோறும் காலை, மாலை இருவேளைகளில் மந்திர ஜெபம் செய்து வருவது நன்மை.

2. ஒரு குறிப்பிட்ட இஷ்ட தெய்வத்தைத் தேர்ந்தெடுத்துக் கொண்டு அந்தத் தெய்வத்துக்குரிய மந்திரங்களை இடை விடாமல் ஜெபித்து வருவது மந்திர ஜெபம் ஆகும்.

3. கலியுகத்தில் கடவுளின் அருளைப் பெறுவதற்கு எளிய வழி மந்திர ஜெபம் ஆகும். இது யோகப் பயிற்சிகளுள் ஓர் அங்கம் ஆகும்.

4. மந்திர ஜெபம் விரும்புகிற ஆற்றலையும் சக்தியையும் ஒருவனுக்குக் கொடுக்க வல்லது.

5. ஒரு குறிப்பிட்ட மந்திரத்தை இடைவிடாமல் மனத்திற்குள் திரும்பத் திரும்பச் சொல்லி வழிபடுவது ஜெபம் எனப்படும். தம் இஷ்ட தெய்வத்தின் உருவத்தை மனதில் இடைவிடாமல் நினைத்துப் பழகுவது தியானம் ஆகும்.

6. ஒரு சாதகன் தொடக்கத்தில் மந்திர ஜெபத்தையும் தியானத் தையும் இணைத்துப் பழகி வரவேண்டும். சற்று முன்னேறிய பிறகு தியானப் பயிற்சியை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

7. இடைவிடாத ஜெபத்தின் மூலம் மரணம், பிறவி என்கிற வாழ்க்கைச் சுழலிலிருந்து ஒருவன் விடுபட முடியும்.

8. நெருப்பில் உள்ள அனல் விசிறி கொண்டு வீசினால் கொழுந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டெரிகிறது அதுபோல ஒருவனிடம் அடங்கிக் கிடக்கிற சக்தி மந்திர சக்தி மூலமாக ஆற்றலோடு வெளிப்படுகிறது.

9. ஒரு மந்திரம் சாதகனுக்கு ஆத்ம சக்தியை எழுப்பி உதவு கிறது. அதுமட்டுமன்றிப் பிறவிதோறும் மனத்தில் தேங்கிக் கிடக்கிற அழுக்குகளை வெளியேற்றுகிறது. அதனால் பழம்பிறவி வாசனைகள் அகற்றப்பட்டுக் பாவங்களிலிருந்து விடுபட முடிகிறது.

10. ஒரு குறிப்பிட்ட இஷ்ட தெய்வ மந்திரத்தை ஒருவன் இடைவிடாமல் ஜெபம் செய்த வருவதால் அவன் மனமும் அந்த தெய்வ வடிவை அடைகிறது. அவன் ஆன்மாவும் மந்திர ஆன்மாவாக மாறுகிறது. நாளடைவில் அவனே அந்தத் தெய்வமாக மாறி அத்வைத நிலைக்கு உயர்கிறான்.

11. மந்திரமும் தேவதையும் வேறு வேறு அல்ல. தேவதையின் சூக்கும உடம்பே மந்திரம்.

12. சில மந்திரங்கள் தீய சக்திகளை விரட்டியடித்து சாதகனை காப்பாற்ற வல்லவை என்று இவை சம்பந்தமான நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

13. சூரியனுக்குரிய மந்திரத்தை இடைவிடாமல் ஜெபிப்பதால் ஒருவன் ஆரோக்கியம், அறிவுத் தெளிவு. நீண்ட ஆயுள், உறுதியான உடம்பு பெறலாம். கண் தொடர்பான நோய்களை நீக்கும் மந்திரம் அது!

14. சரஸ்வதிக்குரிய மந்திரம் ஞானத்தை அளிக்கும். கல்வியில் புலமையை உண்டாக்கும். கற்றறிந்த அறிஞரின் தொடர்பை உருவாக்கும்.

15. கணேச மந்திரம் எடுத்த காரியத்தில் வரும் இடையூறுகளைப் போக்கும்.

16. மகா மிருத்யஞ்ச மந்திரம் என ஒன்ற உண்டு. அதனை இடைவிடாமல் ஜெபித்தால் விபத்துக்கள். தீராத நோய்கள், ஆபத்துக்களிலிருந்து விடுபடலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. சுப்பிரமணிய மந்திரம், அனும மந்திரம் ஆகியவை பகைவர்களை வெற்றி கொள்ள உதவும். தீய சக்திகளால் வருகிற ஆபத்துக்களை முறியடிக்கும்.

18. ஓம், சோஉறம், சிவோஉறம், அகம் பிரம்மாஸ்மி என்ற மந்திரங்கள் ஒருவன் தன்னைத்தானே அறிந்து ஆத்ம ஞானம் பெறச் செய்யும் மோட்ச மந்திரங்கள் ஆகும்.

19. தேள்கடி, பாம்புக்கடி, பாம்புவிடம் நீக்குகிற மந்திரங்கள் உண்டு. கிரகண காலத்தில் இவற்றை உருவேற்றி மந்திர சக்தி பெறலாம். விடியற்காலையில் நீராடி முடித்து, பிரம்மச்சரியத்தை மேற்கொண்டு பழம், பால் மட்டும் அருந்தி, தொடர்ந்து 40 நாட்கள் இம்மந்திரங்களை உருவேற்றி வந்தால் ஒருவன் மந்திர சித்தி பெற முடியும்.

20. மந்திர சித்தி பெற்றவர்கள் மற்றவர்களை துன்புறுத்தவோ, அழிக்கவோ மந்திர சக்தியைப் பயன்படுத்தக் கூடாது. அப்படிச் செய்பவர்கள் இறுதியில் தாமே அழிவார்கள்.

21. மற்றவர்கள் நன்மை பெற மந்திர சக்தியைப் பயன்படுத்த வேண்டும். பிறரிடமிருந்து பணமோ, துணியோ, பழங்களோ கூட பெற்றுக் கொள்ளக்கூடாது. பொதுநலத்துக்காக மந்திர சக்தியைப் பயன்படுத்தினால் அவர்களுக்கு தெய்வ சக்திகள் மேலும் பெருகும்.

22. ஒரு இஷ்ட தெய்வ மந்திரத்தை 13 கோடி முறை சிரத்தையொடு ஜெபித்து வந்தால் அந்தத் தெய்வத்தைக் கண்ணெதிரே உண்மை வடிவோடு பார்க்க முடியும். நீங்கள் உண்மையோடும், பக்தி சிரத்தையோடும், விடா முயற்சியோடும் நான்கு ஆண்டுகள் பழகி வந்தால் அந்தக் காட்சி கிடைக்கும்.

23. கொடியவனும், கொள்ளைக்காரனுமாக இருந்து முனிவராக மாறிய வால்மீகி மரா, மரா என்ற ராம மந்திரத்தை மாற்றி உச்சரித்தப் பெருங்கவிஞராகி ராமாயணம் இயற்றினார். அதுவே வால்மீகி ராமாயணம்.

24. துக்காரம், இறைவன் பெயரையே மந்திரமாக உச்சரித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருஷ்ணனை நேரில் கண்டவர்.

25. துருவன் வாசுதேவ மந்திரத்தை உச்சரித்துக் கிருஷ்ணனை நேரில் கண்டதாகப் புராணம் கூறும்.

26. நாராயண மந்திரத்தை உச்சரித்துப் பிரகலாதன் நாராயணனை நேரில் கண்டார்.

27. வீர சிவாஜியின் கருவான ராமதாசர் கோதாவரி ஆற்றில் நின்றபடி ராம மந்திரத்தை 13 கோடி தடவை உச்சரித்து உருவேற்றி தெய்வ தரிசனம் பெற்றவர்.

38. சுவாமி வித்யாரண்யர் பஞ்சதசி என்ற நூலை இயற்றியவர். காயத்ரி மந்திர ஜெபம் செய்தவர். அன்னை பராசக்தி அவருக்குக் காட்சி கொடுத்து என்ன வரம் வேண்டும் என்றாள். தாயே! தக்காணம் முழுவதும் பஞ்சத்தில் தவிக்கிறது. இந்த மக்களைப் பஞ்சத்திலிருந்து காப்பற்ற பொன் கொடு! என்று வேண்டினாராம். பராசக்தி பொன்னை அள்ளிக் கொட்டினாளாம். மக்கள் பசி தணிந்ததுடன், இந்தப் பேரரசை நிறுவினார் வித்யாரண்யர். அவ்வாறு உருவானதுதான் விஜயநகரப் பேரரசு.

மந்திர வழிபாடும் தொண்டுகளில் ஈடுபாடும் இந்தப் பிறவிக்கும் துணை நிற்கும். காலை மாலை வேளைகளில் மேற்கொள்ளப் படும் வழிபாடு அளவற்ற நன்மைகளை உருவாக்கும்.

ஆனாலும் என்ன? “மாயை” என்ற திரை அறிவை மறைக்கிறது. அதனால் தான் வழிபாட்டில் பலருக்கு ருசி வருவதில்லை. ஒரு முயற்சியும் செய்யாதவனுக்கு கர்மவினைகள் எப்படி நீங்கும்? இறையருள் எப்படி வாய்க்கும்?

ஓம்சக்தி சக்திஒளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாது மாகி நின்றாய்!

யாது மாகி நின்றாய் - காளீ
எங்கும் நீ நிறைந்தாய்;
தீது நன்மை யெல்லாம் - காளீ
தெய்வ லீலை அன்றோ?
பூத மைந்தும் ஆனாய் - காளீ
பொறிகள் ஐந்தும் ஆனாய்
போத மாகி நின்றாய் - காளீ
பொறிக ளைக்க டந்தாய்!

இன்ப மாகி விட்டாய் - காளீ
என்னு ளேபு குந்தாய்;
பின்பு நின்னை யல்லால்
பிறிது நானும் உண்டோ?
அன்பு தந்து விட்டாய் - காளீ
ஆண்மை தந்து விட்டாய்
துன்பம் நீக்கி விட்டாய் - காளீ
துயர ழித்து விட்டாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதி சக்தி வாழ்கவே!

உண்மை யென்றுணர்ந்த நெஞ்சில்!
ஓடி வந்து நிற்பவள்
நன்மை செய்பவர்களுக்கு
ஞான தீபம் ஆனவள்
மென்மையான பண்பினோடு
மேவும் அன்புக் காவியம்
பன்மை ஒன்றும் பாங்கில் வந்த
பாரின் அன்னை வாழ்கவே

வேண்டும் என்னும் வேட்கை தோன்றில்
வேடிக்கைகள் செய்பவள்
பூண்ட வெண்மை செம்மை தன்னில்
பொய்மை மாய்த்து நிற்பவள்
"காண்டி" என்று பெற்ற மக்கள்
காணக் காத்து நிற்பவள்
ஆண்டு கொள்ள இங்கு வந்த
ஆதி சக்தி வாழ்கவே!

சொல்லடங்கி நின்ற போதில்
தூய்மைத் தோற்றம் கொண்டவள்
பல்லுயிர்க்குள் ஊறி நிற்கும்
பாச மென்னும நேசவள்
அல்லலுற்று அழைப்பவாக்கே
ஜயம் நீக்கு கின்றவள்
வல்லமைக் கோர் எல்லை என்னும்
மாண்பின் அன்னை வாழ்கவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதனைகள் நூறு கோடி
சூழ வந்த போதிலும்
நீதி உண்மை தன்னில் ஒன்றி
நின்றிருக்கும் திண்மையில்
ஜோதியாகத் தோற்றம் கொண்டு
தோள் வலிக்குள் வாழ்பவள்
காதணிந்த சக்கரத்தின்
கற்பி னன்னை வாழ்கவே!

பற்றுக் கொள்வதற்குத் தன்னைப்
பாலமாக்கிக் கொண்டவள்
முற்றி நின்ற நற்றவத்தின்
மூலமாகி வந்தவள்
கற்ற தெல்லை இல்லை என்று
கண்ணில் காட்டி நின்றவள்
பெற்ற யாவும் பெற்று வந்த
பேசும் அன்னை வாழ்கவே!

(மதி ஒளி)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராகுகால ஸ்ரீ துர்க்கா அஷ்டகம்

வாழ்வுமானவள் துர்க்கா வாக்குமானவள்
வானில் நின்றவள் இந்த மண்ணில் வந்தனள்
தாழ்வு அற்றவள் துர்க்கா தாயுமானவள்
தாபம் நீக்கியே என்னைத் தாங்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே!

உலகையீன்றவள் துர்க்கா உமையுமானவள்
உண்மையானவள் எந்தன் உயிரைக் காப்பவள்
நிலவில் நின்றவள் துர்க்கா நித்யையானவள்
நிலவி நின்றவள் எந்தன் நிதியும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே!

செம்மையானவள் துர்க்கா ஜெயமும் ஆனவள்
அம்மையானவள் அன்பு தந்தையானவள்
இம்மையானவள் துர்க்கா இன்பமானவள்
மும்மையானவள் என்றும் முழுமை துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே!

உயிருமானவள் துர்க்கா உடலுமானவள்
உலகமானவள் எந்தன் உடமையானவள்
பயிருமானவள் துர்க்கா படரும் கொம்பவள்
பண்பு பொங்கிட என்னுள் பழுத்த துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பமற்றவள் துர்க்கா துரிய வாழ்பவள்
துறையுமானவள் இன்ப தோணியானவள்
அன்பு உற்றவள் துர்க்கா அபயவீடவள்
நன்மை தங்கிட என்னுள் நடக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே!

குருவுமானவள் துர்க்கா குழந்தையானவள்
குலமுமானவள் எங்கள் குடும்ப தீபமே
திருவுமானவள் துர்க்கா திரிசூலி மாயவள்
திருநீற்றில் நின்றிட என்னுள் திகழும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே!

ராகுதேவனின் பெரும்பூஜை ஏற்றவள்
ராகுநேரத்தில் என்னைத் தேடி வருபவள்
ராகுகாலத்தில் எந்தன் தாயை வேண்டினேன்
ராகு துர்க்கையே என்னைக் காக்கும் துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே!

கன்னி துர்க்கையே இதயக் கமல துர்க்கையே
கருணை துர்க்கையே வீர ககன துர்க்கையே
அன்னை துர்க்கையே என்றும் அருளும் துர்க்கையே
அன்பு துர்க்கையே ஜெயதுர்க்கை துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே
தேவி துர்க்கையே ஜெய தேவி துர்க்கையே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துக்க நிவாரண அஷ்டகம்

மங்கள ரூபிணி மதியணி சூலினி
மன்மத பாணியளே;
சங்கடம் நீங்கிடச் சடுதியில் வந்திடும்
சங்கரி சௌந்தரியே;
கங்கண பாணியள் கனிமுகங் கண்டநல்
கற்பகக் காமினியே;
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி!

கானுறு மலரெனக் கதிர்ஒளி காட்டிக்
காத்திட வந்திடுவாள்;
தானுறு தவஒளி தாரொளி மதியொளி
தாங்கியே வீசிடுவாள்;
மானுறு விழியாள் மாதவர் மொழியாள்
மாலைகள் சூடிடுவாள்;
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி!

சங்கரி சௌந்தரி சதுர்முகன் போற்றிடச்
சபையினில் வந்தவளே;
பொங்கரி மாவினில் பொன்னடி வைத்துப்
பொருந்திட வந்தவளே;
எங்குலந் தழைத்திட எழில்வடி வுடனே
எழுந்தநல் துர்க்கையளே;
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தணதண தந்தண தவிலொலி முழங்கிடத்
தண்மணி நீ வருவாய்;
பணபண பம்பண பறையொலி கூவிடப்
பண்மணி நீ வருவாய்;
கணகண கங்கண கதிர்ஒளி வீசிடக்
கண்மணி நீ வருவாய்;
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி!

பஞ்சமி பைரவி பர்வத புத்திரி
பஞ்சநல் பாணியளே;
கொஞ்சிடும் குமரனை குணமிகு வேலனைக்
கொடுத்த நல்குமரியளே;
சங்கடம் தீர்த்திடச் சமரது செய்தநற்
சக்தியெனும் மாயே;
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி!

எண்ணியபடி நீ யருளிட வருவாய்
எங்குல தேவியளே;
பண்ணிய செயலின் பலனது நலமாய்ப்
பல்கிட அருளிடுவாய்;
கண்ணொளி யதனால் கருணையே காட்டிக்
கவலைகள் தீர்ப்பவளே;
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி!

இடர்தரு தொல்லை இனிமேல் இல்லை
யென்றுநீ சொல்லிடுவாய்;
சுடர்தரு அமுதே சுருதிகள் கூறிச்
சுகமதைத் தந்திடுவாய்;
படர்தரு இருளில் பரிதியாய்- வந்து
பழவினை ஓட்டிடுவாய்;


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி!

ஜெய ஜெய பாலா சாமுண்டேஸ்வரி
ஜெய ஜெய ஸ்ரீ தேவி;
ஜெய ஜெய துர்க்கா ஸ்ரீ பரமேஸ்வரி
ஜெய ஜெய ஸ்ரீ தேவி;
ஜெய ஜெய ஜெயந்தி மங்கள காளி
ஜெய ஜெய ஸ்ரீ தேவி;
ஜெய ஜெய சங்கரி கௌரி க்ருபாகரி
துக்க நிவாரணி காமாட்சி!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ மஹிக்ஷாஸுர மர்த்தினி ஸ்தோத்ரம்!

அயி கிரிநந்தினி நந்தித மேதினி
விச்வ விநோதினி நந்தனுதே
கிரிவர விந்த்ய சிரோதி- நிவாஸினி
விஷ்ணு விலாஸினி ஜிஷ்ணுநுதே
பகவதி ஹே சிதிகண்ட்ட குடும்பினி
பூரி குடும்பினி பூரிக்ருதே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்தினி
ரம்யகபர்தினி சைலஸுதே//

ஸுரவர-வர்ஷிணி துர்தர தர்ஷிணி
துர்முக மர்ஷிணி ஹர்ஷரதே
த்ரிபுவன போஷிணி சங்கர - தோஷிணி
கில்பிஷ மோஷிணி கொஷரதே/
தனஜ-நிரோஷிணி திதிஸுதரோஷிணி
துர்மத சோஷிணி ஸிந்து ஸுதே
ஜய ஜய ஹெ மஹிஷாஸுர மர்தினி
ரம்யகபர்தினி சைலஸுதே//

அயி ஜகதம்ப மதம்ப கதம்ப
வனப் பிரிய வாஸினி ஹாஸரதே
சிகரி சிரோமணி துங்க ஹிமாலய
ச்ரங்க நிஜாலய மத்யகதே/
மதுமதுரே மதுகைடப கஞ்ஜினி
கைடப பஞ்ஜினி ராஸரதே
ஜய ஜய ஹெ மஹிஷாஸுர மர்தினி
ரம்யக பர்தினி சைலஸுதே//



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமலதலாமல கோமல காந்தி
கலாகலிதாமல பாலலதே
ஸகலவிலாஸ கலாநிலயக்ரம
கேலி சலத்கல ஹம்ஸகுலே/
அலிகுல ஸம்கல குவலய மண்டல
மௌலிமிலத் பகுலாலிகுலே
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்த்தினி
ரம்யகபர்தினி சைலஸுதே//

கனனலஸத்கல ஸிந்து ஜலைரநு
ஸிஞ்சிநுதே கணரங்கபுவம்
பஜதி ஸகிம் ந சசீ குச கும்ப
தடீபரிரம்ப ஸுகாநுபவம்/
தவசரணம் சரணம் கரவாணி
நதாமரவாணி நிவாஸி சிவம்
ஜய ஜய ஹே மஹிஷாஸுர மர்த்தினி
ரம்யகபர்தினி சைலஸுதே//



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ கருமாரியம்மன் ஸ்தோத்திரம்

கற்பூரநாயகியே! கனகவல்லி
காளிமகமாயி கருமாரியம்மா
பொற்கோவில் கொண்டசிவ காமியம்மா
பூவிருந்த வல்லிதெய்வ யானையம்மா
விற்கோல வேதவல்லி விசாலாட்சி
விழிக்கோல மாமதுரை மீனாட்சி
பொற்கோவில் தானமைத்தேன் இங்குதாயே
சுடராக வாழ்விப்பாய் என்னை நீயே!

(கற்பூர)

புவனமுழு தாளுகின்ற புவனேஸ்வரி
புரமெரித்தோன் புறமிருக்கும் பரமேஸ்வரி
நவநவமாய் வடிவாகும் மகேஸ்வரி
நம்பினவர் கைவிளக்கே சர்வேஸ்வரி
கவலைகளைத் தீர்த்துவிடும் காளீஸ்வரி
காரிருளின் தீச்சுடரே ஜோதீஸ்வரி
உவமானப் பரம்பொருளே ஜகதீஸ்வரி
உன்னடிமைச் சிறியேனை நீயாதரி!

(கற்பூர)

உன்னிடத்தில் சொல்லாமல் வேறுஎந்த
உறைவிடத்தில் முறையிடுவேன் தாயேஎந்தன்
அன்னையவள் நீயிருக்க உலகில்மற்ற
அன்னியரைக் கெஞ்சிடுதல் முறையோ - அம்மா
கண்ணீரைத் துடைத்துவிட ஓடிவா அம்மா
காத்திருக்க வைத்திடுதல் சரியோ அம்மா
சின்னவனின் குரல் கேட்டுன் முகம் திருப்பு
சிரித்தபடி என்னைத்தினம் வழி அனுப்பு!

(கற்பூர)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணிரண்டும் உன்னுருவே காணவேண்டும்
காலிரண்டும் உன்னையே நாடவேண்டும்
பண்ணமைக்கும் நாஉனையே பாடவேண்டும்
பக்தியோடு கையுனையே கூடவேண்டும்
எண்ணமெல்லாம் உன்நினைவே ஆகவேண்டும்
இருப்பதெல்லாம் உன்னுடைய தாகவேண்டும
மண்ணளக்கும் சமயபுர மாரியம்மா
மகனுடைய குறைகளை நீதீருமம்மா

(கற்பூர)

நெற்றியினுள் குங்குமமே நிறைய வேண்டும்
நெஞ்சினிலும் திருநாமம் வழிய வேணடும்
கற்றதெல்லாம் மென்மேலும் பெருக வேண்டும்
கவிதையிலே உன்நாமம் வாழவேண்டும்
சுற்றமெல்லாம் நீடுழி வாழவேண்டும்
ஜோதியிலே நீயிருந்து ஆளவேண்டும்
மற்றதெல்லாம் நானுனக்குச் சொல்லலாமா
மடிமீது பிள்ளை என்னைத் தள்ளலாமா!

(கற்பூர)

அன்னைக்கு உபசாரம் செய்வதுண்டோ
அருள்செய்ய இந்நேரம் ஆவதுண்டோ
கண்ணுக்கு இமையின்றிக் காவலுண்டோ
கன்றுக்கு பசுவன்றிச் சொந்தமுண்டோ
முன்னைக்கும் பின்னைக்கும் பார்ப்பதுண்டோ
முழுமைக்கும் நீஎந்தன் அன்னையன்றோ
எண்ணெய்க்கும் விளக்குக்கும் பேதமுண்டோ
என்றைக்கும் நானுந்தன் பிள்ளையன்றோ!

(கற்பூர)

அன்புக்கே நானடிமை ஆகவேண்டும்
அறிவுக்கே என்காது கேட்கவேண்டும்
வம்புக்கே போகாமல் இருக்க வேண்டும்
வஞ்சத்தை என்னெஞ்சம் அறுக்கவேண்டும்
பண்புக்கே உயிர்வாழ ஆசைவேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிவுக்கே நானென்றும் பணியவேண்டும்
என்பக்கம் இவையெல்லாம் இருக்கவேண்டும்
என்னோடு நீளென்றும் வாழவேண்டும்

(கற்பூர)

கும்பிடவோ கையிரண்டு போதவில்லை
கூப்பிடவோ நாவொன்றால் முடியவில்லை
நம்பிடவோ மெய்யதனில் சக்தியில்லை
நடந்திடவோ காலிரண்டால் ஆகவில்லை
செம்பவள வாயழகி! உன்னெழிலோ
சின்னஇரு கண்களுக்குள் அடங்கவில்லை
அம்பளவு விழியாளே உன்னை என்றும்
அடிபணியும் ஆசைக்கோர் அளவில்லை!

(கற்பூர)

காற்றாகிக் கனலாகிக் கடலாகினாய்
கருவாகி உயிராகி உடலாகினாய்
நேற்றாகி இன்றாகி நாளாகினாய்
நிலமாகி பயிராகி உணவாகினாய்
தோற்றாலும் ஜெயித்தாலும் வாழ்வாகினாய்
தொழுதாலும் அழுதாலும் வடிவாகினாய்
போற்றாத நாளில்லை தாயே உன்னைப்
பொருளோடு புகழோடு வைப்பாய் என்னை!

(கற்பூர)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுத்த சக்தி ஓம் சிவம்!

**ராகம் : மாண்டு** **தாளம் : திஸ்ர ஏகம்**

சுத்தசக்தி சுத்தசக்தி சுத்தசக்தி ஓம்சிவம்
சுத்தசக்தி சுத்தசக்தி சுத்தசக்தி ஓம்சிவம்

சத்தியஞான தர்மசக்தி சாந்தசக்தி ஓம்சிவம்
சச்சிதானந் தாத்மசக்தி சர்வசக்தி ஓம்சிவம்
(சு)

வேதசாஸ்த்ர சகலகலா வித்யாசக்தி ஓம்சிவம்
வீரதீர தைர்யசக்தி விஜயசக்தி ஓம்சிவம்
(சு)

நாககீத கானகலா நடனசக்தி ஓம்சிவம்
மஹாமந்த்ர யந்த்ர-தந்த்ர வச்யசக்தி ஓம்சிவம்
(சு)

யோகபோக த்யாகசக்தி லோகசக்தி ஓம்சிவம்
தாகமோஹ சோகரஹித தபோசக்தி ஓம்சிவம்
(சு)

துஷ்டசத்ரு நாச சக்தி துர்க்கா சக்தி ஓம்சிவம்
அஷ்டலக்ஷ்மி ஞானவாணி அமரசக்தி ஓம்சிவம்
(சு)

குஞ்சிதபத அபயஹஸ்த வாஞ்சிதபல தாயகம்
குருபரசிவ ஹரஹர நடராஜ சுத்த சக்தி ஓம்
(சு)

**- ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓம் சக்தி ஓம்

**ராகம் : மோஹனம்** **தாளம் : ஆதி**

ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்,
ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்,
ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்,
ஓம் சக்தி ஓம், ஓம் சக்தி ஓம்,

ஸுந்தரவதனி ஸுகுண மனோஹரி
மந்தஹாஸ முக மதிவதனி
சந்தன குங்கும அலங்கார முடனே
தந்திடுவா யுந்தன் தரிசனமே! (ஓம்)

நந்திதேவருடன் முனிவரும் பணிய
ஆனந்த முடனே வந்திடுவாய்
வந்தனை செய்து மாயனயனுடன்
வகையாயுன் புகழ் பாடிடவே! (ஓம்)

தங்கச் சிலம்பு சலசலவென்றிட
தாண்டவமாடித் தனயன் மகிழ்ந்திட
பொங்குமானந்தமுடன் புவிமேல் விளங்கும்
மங்கள நாயகி மகிழ்வாய் வருவாய் (ஓம்)

வேதங்கள் உன்னை வேண்டிப் பாடிட
விரும்பி ஸரஸ்வதி வீணை வாசித்திட
சதானந்தமான ஜோதிஸ்வரூபி
ராஜ ராஜேஸ்வரி சரணம் சரணம்!

**- சாது ஸ்ரீ முருகதாஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கற்பக வல்லி!

**ராகம் : ராகமாலிகை** **தாளம் : ஆதி**

## பல்லவி

கற்பக வல்லி நின் பொற்பதங்கள் பிடித்தேன்
நற்கதி அருள்வா யம்மா!

## அனுபல்லவி

பற்பலரும் போற்றும் பதி மயிலாபுரியில்
சிற்பம் நிறைந்த உயர் சிங்காரக் கோயில் கொண்ட
(கற்பக)

## சரணம்

நீ இந்த வேளை தன்னில் சேயன் எனை மறந்தால்
நானிந்த நானிலத்தில் நாடுதல் யாரிடமோ?
ஏனிந்த மௌன மம்மா ஏழை எனக்கருள
ஆனந்த பைரவியே ஆதரித்தாளு மம்மா! (கற்பக)

எல்லோருக்கும் இன்பங்கள் எழிலாய் இரங்கி என்றும்
நல்லாசி வைத்திடும் நாயகியே நித்ய
கல்யாணியெ கபாலி காதல் புரியும் அந்த
உல்லாசியே உமா உனை நம்பினே னம்மா! (கற்பக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜய ஜய ஜய சக்தி!

ஜய ஜய ஜய சக்தி - ஓம் ஸ்ரீ ஜய ஜய ஜய சக்தி
ஜய ஜய வென தினம் பாடிப்பணிந்தோம்
ஜகம் எங்கும் அமைதியைத்தா - ஓம் ஸ்ரீ (ஜய ஜய)

திருப்தியும் இன்பமம் வாழ்வில் துலங்க
தேவையெல்லாம் மறைய - அம்மம்மா
பக்தி பெருகிட பாடி உருகிட
பணிப்பாய் அன்பிலெம்மை - ஓம் ஸ்ரீ (ஜய ஜய)

இரண்டுகள் போக மூன்றகள் அகல
ஈஸ்வரி பலமருள்வாய் - அம்மம்மா
கரம் குவித்தோம் இனிக் காலை விடோமடி
கருணையுடன் அணைப்பாய் - ஓம் ஸ்ரீ (ஜய ஜய)

காசினியெங்கும் வேற்றுமை போக
கருத்தினில் அன்பருள்வாய் - அம்மம்மா
தேசுடன் வாழக் காட்டடி காட்சி
தேவியுடன் அடைக்கலம் நான் - ஓம் ஸ்ரீ (ஜய ஜய)

நமஸ்காரம் இருவினை கருத்தினில் ஞான
நல்லொளி தீபம் வைத்து - அம்மம்மா
நமஸ்காரம் செய்து ஆரத்தி செய்தோம்
ஞாலத்திற் கமைதியைத் தா - ஓம் ஸ்ரீ (ஜய ஜய)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலை வளர் காதலி

**ராகம் : மோஹனம்** **தாளம் : அடைதாளம்**

பூரணி புராதனி சுமங்கலை சுந்தரி
புராந்தகீ த்ரியம்பகீ எழில்
புங்கவி விளங்குசிவ சங்கரி சஹஸ்ரதள
புட்பமிசை வீற்றி ருக்கும்
நாரணி மனாதீத நாயகி குணாதீத
நாதாந்த சக்தி என்றுன்
நாமமே யுச்சரித் திடுமடியர் நாமமே
நானுச் சரிக்க வசமோ
வாரணி சடைக்கடவு ளாரணி யெனப் பகழ
அகிலாண்ட கோடி யீன்ற
அன்னையே பின்னையங் கன்னியென மறைபேசும்
ஆனந்த ரூப மயிலே
வாரணியு மிருகொங்கை மாதர் மகிழ் கங்கைபுகழ்
வளமருவு தேவை யரசே
வரைராச னுக்கிருகண் மணியா யுதித்தமலை
வளர்கா தலிப்பெ ணுமையே.

**- ஸ்ரீ தாயுமான சுவாமிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டாள் அருளிய

# திருப்பாவை

பாவை நோன்பைப் பற்றி ஆண்டாள் பாடிய முப்பது பாடல்களே 'திருப்பாவை' என்று அழைக்கப்படுகிறது. பன்னிரண்டு ஆழ்வார் களில் ஒருவரான பெரியாழ்வாருக்கு பூமியிலிருந்து கிடைத்த மகள் தான் கோதை என்ற ஆண்டாள். இவர் கண்ணனின் தீவிர பக்தை. அவரையே நினைத்திருந்து கடைசியில் ஸ்ரீரங்கத்தில் அவரையே மணந்து அவரால் ஆட்கொள்ளப்பட்டவர்.

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர்! போதுமினோ, நேரிழையீர்!
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்,
ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்,
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்
நாரா யணனே, நமக்கே பறைதருவான்,
பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய். 1

வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம்பாவைக்குச்
செய்யுங் கிரியைகள் கேளீரோ! பாற்கடலுள்
பையத் துயின்ற பரமன் அடிபாடி,
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலை நீராடி
மையிட் டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம்
செய்யா தனசெய்யோம் தீக்குறளைச் சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய். 2

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றிநீர் ஆடினால்,
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓங்கு பெரும்செந்நெ லூடு கயல் உகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப,
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய். 3

ஆழி மழைக்கண்ணா! ஒன்று நீ கைகரவேல்
ஆழியுட் புக்கு முகந்துகொ டார்த்தேறி,
ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்து
பாழியந் தோளுடைப் பற்பநா பன்கையில்
ஆழிபோல் மின்னி, வலம்புரிபோல் நின்றதிர்ந்து,
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய், நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். 4

மாயனை மன்னு வடமதுரை மைந்தனைத்
தூய பெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கைத்
தாயைக் குடல்விளக்கம் செய்த தாமோதரனைத்
தூயோமாய் வந்துநாம் தூமலர் தூவித்தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப்
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலே ரெம்பாவாய். 5

புள்ளும் சிலம்பினகாண் புள்ளரையன் கோயிலில்
வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ?
பிள்ளாய்! எழுந்திராய், பேய்முலை நஞ்சுண்டு,
கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி,
வெள்ளத்தரவில் துயிலமர்ந்த வித்தினை,
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள எழுந்து அரியென்ற பேரரவம்
உள்ளம்புகுந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். 6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீசுகீசென்று எங்கும் ஆனைச்சாத் தன்கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ? பேய்ப்பெண்ணே!
காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங்குழ லாய்ச்சியர் மத்தினால்
ஓசை படுத்தத் தயிரரவம் கேட்டிலையோ?
நாயகப் பெண்பிள்ளாய்! நாராயணன் மூர்த்தி
கேசவனைப் பாடவும்நீ கேட்டே கிடத்தியோ?
தேசமுடையாய்! திறவேலோ ரெம்பாவாய். 7

கீழ்வானம் வெள்ளென்று, எருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண் மிக்குள்ள பிள்ளைகளும்
போவான் போகின்றாரைப் போகாமல் காத்துன்னைக்
கூவுவான் வந்து நின்றோம், கோதுகலமுடைய
பாவாய்! எழுந்திராய் பாடிப் பறைகொண்டு
மாவாய் பிளந்தானை, மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்றுநாம் சேவித்தால்
ஆவாவென் றாராய்ந் தருளேலோ ரெம்பாவாய். 8

தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய,
தூபங் கமழத் துயிலணைமேல் கண்வளரும்
மாமன் மகளே! மணிக்கதவம் தாள்திறவாய்
மாமீர்! அவளை எழுப்பீரோ? உம்மகள்தான்
ஊமையோ? அன்றிச் செவிடோ அனந்தலோ?
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ?
மாமயன், மாதவன், வைகுந்தன் என்றென்று
நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய். 9

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்!
மாற்றமும் தாராரோ? வாசல் திறவாதார்
நாற்றத் துழாய்முடி நாராயணன் நம்மால்
போற்றப் பறைதரும் புண்ணியனால் பண்டொருநாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கர்ணனும்
தோற்றம் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆற்ற வனந்த னுடையாய்! அருங்கமலமே!
தேற்றமாய் வந்து திறவேலா ரெம்பாவாய். 10

கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து
செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யும்
குற்றமொன் றில்லாத கோவலர்தம் பொற்கொடியே!
புற்றர வல்குல் புனமயிலே! போதராய்!
சுற்றத்துத் தோழிமார் எல்லோரும் வந்துநின்
முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர்பாட
சிற்றாதே பேசாதே செல்லப்பெண் டாட்டி! நீ
எற்றுக்கு உறங்கும் பொருளேலோ ரெம்பாவாய். 11

கனைத்திளங் கற்றெருமை கன்றுக் கிரங்கி
நினைத்து முலைவழியே நின்றுபால் சோர
நனைத்தில்லம் சேறாக்கும் நற்செல்வன் நங்காய்!
பனித்தலை வீழநின் வாசல் கடைபற்றிச்
சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக் கினியானைப் பாடவும்நீ வாய்திறவாய்!
இனித்தான் எழுந்திராய்; ஈதென்ன பேருறக்கம்?
அனைத்தில்லத் தாரும் அறிந்தேலோ ரெம்பாவாய்.12

புள்ளின்வாய் கீண்டானை, பொல்லா அரக்கனைக்
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்,
பிள்ளைகள் எல்லாரும் பாவைக் களம்புக்கார்;
வெள்ளி எழுந்து, வியாழம் உறங்கிற்று;
புள்ளும் சிலம்பினகாண்; போதரிக் கண்ணினாய்!
குள்ளக் குளிரக் குடைந்து நீராடாதே,
பள்ளிக் கிடத்தியோ? பாவாய்! நீ நன்னாளால்
கள்ளம் தவிர்ந்து கலந்தேலோ ரெம்பாவாய். 13

உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பின காண்;
செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்றார்;
எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய்! எழுந்திராய், நாணாதாய்! நாவுடையாய்!
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணானைப் பாடேலோ ரெம்பாவாய். 14

எல்லே இளங்கிளியே! இன்னம் உறங்குதியோ?
சில்லென் றழையேன்மின், நங்கைமீர்! போதர்கின்றேன்;
'வல்லை, உன் கட்டுரைகள்! பண்டேஉன் வாயறிதும்!'
'வல்லீர்கள் நீங்களே, நானேதான் ஆயிடுக!'
'ஒல்லைநீ போதாய், உனக்கென்ன வேறுடையை?'
'எல்லோரும் போந்தாரோ?' 'போந்தார், போந்து எண்ணிக்கொள்'
வல்லானை கொன்றானை, மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை, மாயனைப் பாடேலோ ரெம்பாவாய். 15

நாயக னாய்நின்ற நந்தகோபனுடைய
கோயில்காப் பானே! கொடித்தோன்றும் தோரண
வாயில்காப் பானே! மணிக்கதவம் தாள்திறவாய்;
ஆயர்சிறுமிய ரோமுக்கு அறைபறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்;
தூயோமாய் வந்தோம் துயிலெழுப் பாடுவான்;
வாயால் முன்னமுன்னம் மாற்றாதே அம்மா! நீ
நேய நிலைக்கதவம் நீக்கேலோ ரெம்பாவாய். 16

அம்பரமே, தண்ணீரே, சோறே அறஞ்செய்யும்
எம்பெருமான்! நந்தகோ பாலா! எழுந்திராய்;
கொம்பனார்க் கெல்லாம் கொழுந்தே! குலவிளக்கே!
எம்பெரு மாட்டி! யசோதாய்! அறிவுறாய்;
அம்பரம் ஊடறுத் தோங்கி உலகளந்த
உம்பர்கோ மானே! உறங்காது எழுந்திராய்;
செம்பொற் கழலடிச் செல்வா! பலதேவா!
உம்பியும் நீயும் உறங்கேலோ ரெம்பாவாய். 17


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உந்து மதகளிற்றன் ஓடாத தோள்வலியன்,
நந்தகோ பாலன் மருமகளே! நப்பின்னாய்!
கந்தம் கமழும் குழலீ! கடைதிறவாய்;
வந்தெங்கும் கோழி அழைத்தனகாண்; மாதவிப்
பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்;
பந்தார் விரலி! உன் மைத்துனன் பேர்பாட,
செந்தா மரைக்கையால் சீரார் வளையொலிப்ப
வந்து திறவாய், மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். 18

குத்து விளக்கெரியக் கோட்டுக்கால் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறிக்
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர்மார்பா! வாய்திறவாய்;
மைத்தடங் கண்ணினாய்! நீ உன் மணாளனை
எத்தனை போதும் துயிலெழ ஒட்டாய்காண்,
எத்தனை யேலும் பிரிவாற்ற கில்லாயால்,
தத்துவம் அன்று தகவேலோ ரெம்பாவாய். 19

முப்பத்து மூவர் அமரர்க்கு முன்சென்று
கப்பம் தவிர்க்கும் கலியே! துயிலெழாய்;
செப்பம் உடையாய்! திறலுடையாய்! செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா! துயிலெழாய்;
செப்பன்ன மென்முலை செவ்வாய் சிறுமருங்குல்
நப்பின்னை நங்காய்! திருவே! துயிலெழாய்;
உக்கமும் தட்டொளியும் தந்துஉன் மணாளனை
இப்போதே எம்மை நீராட்டேலோ ரெம்பாவாய். 20

ஏற்றகலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப
மாற்றாதே பால்சொரியும் வள்ளல் பெரும்பசுக்கள்
ஆற்றப் படைத்தான் மகனே! அறிவுறாய்;
ஊற்றமுடையாய்! பெரியாய்! உலகினில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றமாய் நின்ற சுடரே! துயிலெழாய்;
மாற்றார் உனக்கு வலிதொலைந்து உன்வாசற்கண்
ஆற்றாதுவந்து உன்னடிபணியு மாபோலே,
போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோ ரெம்பாவாய்.
21

அங்கண் மாஞாலத் தரசர் அபிமான
பங்கமாய் வந்துநின் பள்ளிக்கட் டிற்கீழே
சங்கமிருப் பார்போல் வந்துதலைப் பெய்தோம்;
கிங்கிணி வாய்ச் செய்த தாமரைப் பூப்போலே,
செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ?
திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற் போல்,
அங்கணி ரண்டும் கொண்டு எங்கள்மேல் நோக்குதியேல்
எங்கள்மேல் சாபம் இழிந்தேலோ ரெம்பாவாய். 22

மாரிமலை முழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்
சீரியசிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து,
வேரிமயிர் பொங்க எப்பாடும் பேர்ந்துதறி,
மூரிநிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்,
போதருமா போலேநீ பூவைப்பூவண்ணா! உன்
கோயில்நின்றும் இங்ஙனே போந்தருளிக்
கோப்புடைய
சீரியசிங் காசனத்திருந்து யாம்வந்த
காரியம் ஆராய்ந் தருளேலோ ரெம்பாவாய். 23

அன்று இவ்வுலகம் அளந்தாய்! அடிபோற்றி,
சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய்!
திறல்போற்றி,
பொன்றச் சகடம் உதைத்தாய்! புகழ்போற்றி,
கன்று குணிலா எறிந்தாய்! கழல்போற்றி,
குன்று குடையா எடுத்தாய்! குணம்போற்றி,
வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல்போற்றி,
என்றென்று உன்சேவகமே ஏத்திப் பறைகொள்வான்
இன்றுயாம் வந்தோம், இரங்கேலோ ரெம்பாவாய்.24


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்து வளர,
தரிக்கிலா னாகித் தான் தீங்கு நினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
நெருப்பென்ன நின்ற நெடுமாலே! உன்னை
அருத்தித்து வந்தோம்; பறைதருதி யாகில்
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி
வருத்தமுந் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். 25

மாலே! மணிவண்ணா! மார்கழிநீ ராடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்
ஞாலத்தை யெல்லாம் நடுங்குமுரல்வன
பாலன்ன வண்ணத்துள் பாஞ்சசன்னியமே
போல்வன சங்கங்கள் போய்ப்பாடுடையனவே,
சாலப்பெரும் பறையே, பல்லாண் டிசைப்பாரே,
கோல விளக்கே, கொடியே, விதானமே,
ஆலின் இலையாய்! அருளேலோ ரெம்பாவாய். 26

கூடாரை வெல்லுஞ்சீர்க் கோவிந்தா! உன்தன்னை
பாடிப் பறைகொண்டு யாம்பெறும் சம்மானம்;
நாடு புகழும் பரிசினால் நன்றாக,
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே யென்றனைய பல்கலனும் யாம் அணிவோம்;
ஆடை உடுப்போம்; அதன்பின்னே பாற்சோறு
மூடநெய் பெய்து முழங்கை வழிவார
கூடியிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். 27

கறவைகள் பின்சென்று கானம் சேர்ந்துண்போம்;
அறிவொன்று மில்லாத ஆய்க்குலத்து
உன்றன்னைப்
பிறவிப் பெறுந்தனைப் புண்ணியம் யாம் உடையோம்;
குறைவொன்று மில்லாத கோவிந்தா!
உன்றன்னோடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது!
அறியாத பிள்ளைகளோ அன்பினா
லுன்றன்னை
சிறுபேர ழைத்தனவும் சீறி யருளாதே,
இறைவா, நீ தாராய் பறையேலோ ரெம்பாவாய்.
28

சிற்றம் சிறுகாலே வந்துன்னைச் சேவித்துன்
பொற்றா மரையடியே போற்றும் பொருள் கேளாய்;
பெற்றம் மேய்த்துண்ணும் குலத்திற் பிறந்து நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது;
இற்றைப் பறைகொள்வான் அன்று காண் கோவிந்தா!
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே ஆவோம்; உனக்கே நா மாட்செய்வோம்;
மற்றைநம் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய். 29

வங்கக் கடல்கடைந்த மாதவனைக் கேசவனைத்
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி
அங்கப் பறைகொண்ட ஆற்றை, அணி புதுவைப்
பைங்கமலத் தண்தெரியல் பட்டர்பிரான் கோதை
சொன்ன
சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே
இங்கிப் பரிசுரைப்பார், ஈரிரண்டு மால்வரைத்தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள்பெற் றின்புறுவ ரெம்பாவாய். 30


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரிய திருமொழி

## ஸ்ரீ திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்தது

வாடினேன்வாடி வருந்தினேன்மனத்தால்
பெருந்துயரிடும் பையில்பிறந்து
கூடினேன்கூடி இளையவர்தம்மோடு
அவர்தரும்கல வியேகருதி
ஓடினேன்ஓடிஉ வப்ப தோர்பொருளால்
உணர்வெனும் பெரும்பதம்தெரிந்து
நாடினேன் நாடிநான் கண்டுகொண்டேன்
நாராயணாவெனும் நாமம்

குலந்தரும் செல்வம் தந்திடும் அடியார்
படுதுய லாயின எல்லாம்
நிலந்தரும் செய்யும் நீள்விசும் பருளும்
அருளொடு பெருநிலம் அளிக்கும்
வலந்தரும் மற்றுந் தந்திடும் பெற்ற
தாயினும் ஆயின செய்யும்
நலந்தரும் சொல்லைகான் கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்

யானும் தானா யொளிந்தானை
யாதும் எவர்க்கும் முன்னோனை
தானும் சிவனும் பிரமனும்
ஆகிப் பணைந்த தனிமுதலை
தேனம் பாலும் கன்னலும்
அமுதமாகித் தித்தித்தென்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊனில் உயிரில் உணர்வினில்

நின்ற வொன்றை யுணர்ந்தேனே

பச்சைமா மலைபோல்மேனி

பவளவாய்ச் கமலச் செங்கண்

அச்சுதா அமர ரேறே

ஆயர்தங் கொழுந்தே யென்னும்

இச்சுவை தவிர யான் போய்

இந்திர லோக மாளும்

அச்சுவை பெறினும் வேண்டேன்

அரங்கமா நகரு ளானே.

தாயேதந்தையென்றும் தாரமேகிளைமக்களென்றும்

நோயேபட்டொழிந்தேன் உன்னைக் காண்பதோராசையினால்

வேயேம்பூம்பொழிசூழ்விரையார் திருவேங்கடவா

நாயேன்வந்து அடைந்தேன்நல்கி ஆளென்னைக்கொண்டருளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்குமி துதி

இத்துதிப் பாடல்கள் அதிவீரராமபாண்டியன் பாடிய **காசிகாண்டம்** என்னும் புராணத்தில் உள்ளதாகும்.

1. மடற்கமல நறும்பொகுட்டில் அரசிருக்குஞ்
   செந்துவர்வாய் மயிலே மற்றுன்
   கடைக்கண்ணருள் படைத்தன்றோ மணிவண்ணன்
   உலகமெலாங் காவல் பூண்டான்
   படைத்தனனன் முகக்கிழவன் பசுங்குழவி
   மதிபுனைந்த பரமன் றானும்
   துடைத்தனன்நின் பெருஞ்சீர்த்தி எம்மனோ
   ராலெடுத்துச் சொல்லற் பாற்றோ!

2. மல்லற்நெடும் புவியனைத்தும் பொதுநீக்கித்
   தனிபுரக்கும் மன்னர் யாரும்
   கல்வியினிற் பேரறிவிற் கட்டழகிழல்
   நிகரில்லாக் காட்சி யோரும்
   வெல்படையிற் பகைதுரந்து வெஞ்சமரில்
   வாகைபுனை வீரர் தாமும்
   அல்லிமலர்ப் பொகுட்டுரையும் அணியிழைநின்
   அருள்நோக்கம் அடைந்துள்ளாரே!

3. செங்கமலப் பொலந்தாதிற் நிகழ்தொளிக்கும்
   எழின்மேனித் திருவே வேலை
   அங்கணுல கிருள்துரக்கும் அலர்கதிராய்
   வெண்மதியாய் அமரர்க் கூட்டும்
   பொங்கழலாய் உலகளிக்கும் பூங்கொடியே
   நெடுங்கானிற் பொருப்பின் மண்ணில்
   எங்குளைநீ அவணன்றோ மல்லல்வளஞ்
   சிறந்தோங்கிஇருப்ப தம்மா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரஸ்வதி தேவியின் புகழ்

**ராகம் : ஆனந்தபைரவி** **தாளம் : சாப்பு**

வெள்ளைத்தாமரைப் பூவில் இருப்பாள்
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்
கொள்ளை இன்பம் குலவு கவிதை
கூறு பாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ளதாம் பொருள் தேடி உணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின் றொளிர்வாள்
கள்ள மற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொருளாவாள். (வெள்ளைத்)

மாதர் தீங்குரற் பாட்டில் இருப்பாள்
மக்கள் பேசு மழலையில் உள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியி னாவை இருப்பிடங் கொண்டாள்
கோத கன்ற தொழிலுடைத் தாகிக்
குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈத னைத்தின் எழிலிடை யுற்றாள்
இன்ப மேவடி வாகிடப் பெற்றாள். (வெள்ளைத்)

வஞ்ச மற்ற தொழில்புரிந்துண்டு
வாழு மாந்தர் குலதெய்வ மாவாள்
வெஞ்ச மர்க்குயி ராகிய கொல்லர்,
வித்தை யோர்ந்திடு சிற்பியர், தச்சர்
மிஞ்ச நற்பொருள் வாணிகஞ் செய்வோர்,
வீர மன்னர்பின் வேதியர், யாரும்
தஞ்ச மென்று வணங்கிடுந் தெய்வம்
தரணிமீதறி வாகிய தெய்வம். (வெள்ளைத்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வம் யாவு முணர்ந்திடுந் தெய்வம்,
தீமை காட்டி விலக்கிடுந் தெய்வம்,
உய்வ மென்ற கருத்துடை யோர்கள்
உயிரி னுக்குயி ராகிய தெய்வம்
செய்வ மென்றொரு செய்கை யெடுப்போர்
செம்மை நாடிப்பணிந்திடு தெய்வம்,
கைவ ருந்தி யுழைப்பவர் தெய்வம்,
கவிஞர் தெய்வம், கடவுளர் தெய்வம். (வெள்ளைத்)

செந்தமிழ்மணி நாட்டிடை யுள்ளீர்!
சேர்ந்தித் தேவை வணங்குவம் வாரீர்!

வந்த னம்இவட் கேசெய்வ தென்றால்
வாழி ய..திங் கெளிதன்று, கண்டீர்
மந்தி ரத்தை முணுமுணுத் தேட்டை
வரிசை யாக அடுக்கி யதன்மேல்
சந்தனத்தை மலரை யிடுவோர்
சாத்தி ரம்இவள் பூசனை யன்றாம். (வெள்ளைத்)

வீடு தோறுங் கலையின் விளக்கம்,
வீதி தோறுமிரண்டொரு பள்ளி,
நாடு முற்றிலுமுள்ளன ஊர்கள்
நகர்க ளெங்கும் பற்பல பள்ளி,
தேடு கல்வியி லாததோ ரூரைத்
தீயினுக் கிரையாக மடுத்தல்
கேடு தீர்க்கு மமுதமே என்னை
கேண்மை கொள்ள வழியிவை கண்டீர்! (வெள்ளைத்)

ஊனர் தேசம், யவனர்தந் தேசம்,
உதய ஞாயிற் றொளிபெறு நாடு,
சேண கன்றதோர் சிற்றடிச் சீனம்,
செல்வப் பார சிகப்பழந் தேசம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோண லத்த துருக்க, மிசிரம்,
சூழ்க டற்கப் புறத்தினி லின்னும்
காணும்பற்பல நாட்டிடை யெல்லாம்
கல்வித் தேவி னொளிமிகுத் தோங்க (வெள்ளைத்)

ஞான மென்பதோர் சொல்லின் பொருளாம்,
நல்ல பாரத நாட்டிடை வந்தீர்,
ஊன மின்று பெரிதிழைக் கின்றீர்,
ஓங்கு கல்வி யுழைப்பை மறந்தீர்,
மான மற்று விலங்குக ளொப்ப
மண்ணில் வாழ்வதை வாழ்வென லாமோ?
போன தற்கு வருந்ததல் வேண்டா:
புன்மை தீர்ப்ப முயலுவம் வாரீர்! (வெள்ளைத்)

இன்ன றுங்கனிச் சோலைகள் செய்தல்,
இனிய நீர்த்தண் சுனைக ளியற்றல்,
அன்ன சத்திரமாயிரம் வைத்தல்,
ஆல யம்பதி னாயிர நாட்டல,
பின்ன ருள்ள தருமங்கள் யாவும்,
பெயர்வி ளங்கி யொளிர நிறுத்ததல்,
அன்ன யாவினம் புண்ணியங் கோடி
ஆங்கோ ரேழைக் கெழுத்தறி வித்தல். (வெள்ளைத்)

நிதிமி குந்தவர் பொற்குவை தாரீர்!
நிதிகு றைந்தவர் காசுகள் தாரீர்!
அதுவு மற்றவர் வாய்ச்சொ லருளீர்
ஆண்மை யாள ருழைப்பினை நல்கீர்!
மதுரத் தேமொழி மாதர்க ளெல்லாம்
வாணி பூசைக் குரியன பேசீர்!
எதுவு நல்கியிங் கெவ்வகை யானும்
இப் பெருந்தொழில் நாட்டுதும் வாரீர்! (வெள்ளைத்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயகலைகள்!

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை- தூய
உருப்பளிங்கு போல்வாள் என்னுள்ளத்தினுள்ளே
இருப்பாள் இங்கு வாராதிடர்!

வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தில் வீற்றிருப்பாள் - வெள்ளை
அரியாசனத்தில் அரசரோடெம்மைச்
சரியாசனம் வைத்த தாய்!

படிக நிறமும் பவளச் செவ்வாயும்
கடிகமழ் பூந்தாமரைபோலற் கையும்- துடியிடையும்
அல்லும் பகலும் அனவரதமும் துதித்தால்
கல்லும் சொல்லாதோ கவி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமரகுருபரர் அருளியது

# சகலகலா வல்லிமாலை



வெண்டாமரைக்கன்றி நின்பதந்
தாங்க என் வெள்ளை உள்ளத்
தண்டாமரைக்குத் தகாது கொலோ
சக ஏழும் அளித்து
உண்டான் உறங்க, ஒழித்தான்பித் தாக
உண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே!
சகல கலாவல்லியே!

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியில் பணித்தருள்
வாய் பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொன் கொடியே!
கனதனக் குன்று மைம்பாற்
காடுஞ் சுமக்கும் கரும்பே!
சகல கலாவல்லியே!

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமுது
ஆர்ந்துன் னருட் கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கோ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிமழை சிந்தக் கண்டு
களிக்கும் கலாபமயிலே!
சகல கலாவல்லியே!

தூக்கும் பனுவற் றுறை தோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்: வட நூற்கடலும்,
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந் நாவினின்று
காக்கும் கருணைக்கடலே!
சகல கலாவல்லியே!

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததெனே
நெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன்
செந்நாவும் மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே!

பண்ணும் பரதமும் கல்வியுந்
தீஞ் சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்,
விண்ணும் புவியும் புனலும் கனலும்
வெங் காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே!

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காயுளங்கொண்டு தொண்டர்
தீட்டுங் கலைத் தமிழ் தீம்பால்
லமுதம் தெளிக்கும்வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே!

சொல்விற் பனமு மவதான
முங் கல்விசொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய் நளினா சனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே!

சொற்கும், பொருட்கு முயிராமெஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்
நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே
சகல கலாவல்லியே!

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவில் பணியச் செய்
வாய்படைப் போன்முதலாய்
விண்கண்ட தெய்வம்பல் கோடி
யுண்டேனும் விளம்பிலுன் போற்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிராமி அந்தாதி

அபிராமி அந்தாதி என்னும் நூல் அபிராமிப் பட்டரால் பாடப் பட்டது. அதில் அந்தாதித் தொடராக நூறு பாடல்கள் உள்ளன. நவராத்திரிகால முதல் மூன்று நாட்களில் துர்க்கைக்கான பாடல் களையும், அடுத்துவரும் மூன்று நாட்களில் இலக்குமி துதிப்பாடல் களையும், இறுதி மூன்று நாட்களில் சரஸ்வதியைத் தொழ சகலகலாவல்லி மாலையையும் படிக்கலாம். புரட்டாதி மாத வளர் பிறை முதல் ஒன்பது தினங்கள் நோற்கப்படும் விரதம் நவராத்திரி விரதமாகும்.

மனிதருந் தேவரு மாயா முனிவரும் வந்துசென்னி
குனிதருஞ் சேவடிக் கோமள மேகொன்றை வார்சடை மேற்
பனிதருந் திங்களும் பாம்பும் பகீரதி யும் படைத்த
புனிதரு நீயுமென் புந்தியெந் நாளும் பொருந்துகவே.

நின்றும் மிருந்தும் கிடந்து நடந்தும் நினைப்பதுன்னை;
என்றும் வணங்குவ துன்மலர்த் தாளெழு தாமறையின்
ஒன்றும் மரும்பொரு ளேயருளே உமை யேஇமயத்து
அன்றும் பிறந்தவ ளேஅழி யாமுத்தி ஆனந்தமே.

பூத்தவ ளேபுவ னம்பதி னான்கையும் பூத்தவண்ணம்
காத்தவா ளேபின் கரத்தவளே கறைக் கண்டனுக்கு
மூத்தவ ளேயென்றும் மூவா முகுந்தற் கிளையவளே
மாத்தவ ளேயுன்னை யன்றிமற்றோர் தெய்வம் வந்திப்பதே.

வவ்விய பாகத் திறைவரு நீயு மகிழ்ந்திருக்கும்
செவ்வியு முங்க டிருமணக் கோலமுஞ் சிந்தையுள்ளே
யவ்வியத் தீர்த்தெனையாண்டபொற் பாதமு மாகிவந்து
வெவ்விய காலனென் மேல்வரும் போது வெளிநிற்கவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணியே மணியி னொளியே யொருளி மணிபுதைந்த
அணியே யணியு மணிக்கழ கேயணு காதவர்க்குப்
பிணியே பிணிக்கு மருந்தே யமரர் பெருவிருந்தே
பணியே னொருவரை நின்பத்ம பாதம் பணிந்த பின்னே.

சொல்லும் பொருளு மெனநட மாடுந் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே நின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலுந் தொழுமவர்க்கே அழி யாவரசுஞ்
செல்லுந் தவநெறி யுஞ்சிய லோகமுஞ் சித்திக்குமே.

சித்தியுஞ் சித்தி தருந்தெய்வ மாகித் திகழும்பரா
சக்தியுஞ் சக்தி தழைக்குஞ் சிவமுந் தவமுயல்வார்
முத்தியு முத்திக்கு வித்தும் வித்தாகி முளைத் தெழுந்த
புத்தியும் புத்தியினுள்ளே புரக்கும் புரத்தையன்றே.

வெறுக்குந் தகைமைகள் செய்யினுந் தம்மடி யாரைமிக்கோர்
பொறுக்குந் தகைமை புதியதன் றேபுது நஞ்சை யுண்டு
கறுக்குந் திருமிடற் றானிடப் பாகங் கலந்த பொன்னே.
மறுக்கும் தகைமைகள் செய்யினும் யானுனை வாழ்த்துவனே.

தனந்தருங் கல்வி தருமொரு நாளுந் தளர்வறியா
மனந்தருந் தெய்வடிவுந் தரும்நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரு நல்லன வெல்லாந் தருமன்ப ரென்பவர்க்கே
கனந்தரும் பூங்குழலாளபி ராமி கடைக்கண்களே.

ஆத்தாளை எங்கள் அபிராம வல்லியை யண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவியடங்கக்
காத்தாளை யங்குச பாசாங் குசமுந் கரும்புமங்கை
சேர்த்தாளை முக்கண்ணியைத்தொழு வார்க்கொரு தீங்கில்லையே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ அபிராமிப் பட்டர் அருளியது

# திருக்கடவூர்த் துதிப் பதிகம்!

திருச்சிற்றம்பலம்.

கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
  கபடுவா ராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
  கழுபிணியி லாத உடலும்
சலியாத மனமும் அன் பகலாத மனைவியும்
  தவறாத சந்தா னமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
  தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
  துன்பமில் லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும் உத விப்பெரிய
  தொண்டரோடு கூட்டு கண்டாய்.
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே
  ஆதிகட வூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
  அருள்வாமி! அபிராமியே!

திருச்சிற்றம்பலம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரி காப்பு



## விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வு தரும்
எற்குற்றமும் வாராமற்கா.

## வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கைக்கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மாகாளி தாயே
கொடியமகி ஷாசுரனைக் கூறு போட்டவளே
அசுரக் குணம்யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மாநீ நோன்பிருந்தாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகைபாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிவிடு
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நற்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான்விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே!
ஏட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லமையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
என்தாயே வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏந்திழையே தாயாரே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள் இவையெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்பினைக் கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் கொழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையில்பூண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபத்தொரு நாள்வரையில் இசையும் விரதமொடு
பக்தி மனதொடு பரவி யணிவோர்க்கு
சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
இச்சகத்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவார்
சொற்சக்தி பொருட்சக்தி துலக்கமொடு வந்திடவே
அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கி விட
ஞானங் கிளர்ந்துவர நல்லருளைச் செய்திடுவாய்
தெவிட்டாத தீங்கனியே தேவிபரா சக்தியம்மா
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.

*முற்றும்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்துமாரி!

உலகத்து நாயகியே - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ -
உன்பாதம் சரண்புகுந்தோம்- எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ -
கலகத் தரக்கர்பலர் - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ -
கருத்தினுள்ளே புகுந்துவிட்டார் - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ -
பலகற்றும் பலகேட்டும் - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ -
பயனொன்று மில்லையடி - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ -
நிலையெங்கம் காணவில்லை - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ -
நின்பாதம் சரண்புகுந்தோம் - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ -

துணிவெளுக்க மண்ணுண்டு - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ -
தோல்வெளுக்கச் சாம்பருண்டு - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ -
மணிவெளுக்கச் சாணையுண்டு - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்து மாரீ -
மனம் வெளுக்க வழியில்லை - எங்கள் முத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாரியம்மா, எங்கள் முத்து மாரீ -

பிணிகளுக்கு மாற்றுண்டு - எங்கள் முத்து

மாரியம்மா, எங்கள் முத்து மாரீ -

பேதமைக்கு மாற்றில்லை - எங்கள் முத்து

மாரியம்மா, எங்கள் முத்து மாரீ -

அணிகளுக்கொ ரெல்லையில்லாய் - எங்கள் முத்து

மாரியம்மா, எங்கள் முத்து மாரீ -

அடைக்கலமிங் குனைப்புகுந்தோம் - எங்கள் முத்து

மாரியம்மா, எங்கள் முத்து மாரீ -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேல்மருவத்தூர்

# ஓம் சக்தி







## மூல மந்திரம்

ஓம் சக்தியே! பராசக்தியே!

ஓம் சக்தியே! ஆதி பராசக்தியே!

ஓம் சக்தியே! மருவூர் அரசியே!

ஓம் சக்தியே! ஓம் விநாயகா!

ஓம் சக்தியே! ஓம் காமாட்சியே!

ஓம் சக்தியே! ஓம் பங்காரு காமாட்சியே!

**ஓம் சக்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்காரு அடிகளே சரணம்!

# ஆன்மீககுரு அருள்திரு பங்காரு அடிகளார் மேல்மருவத்தூர்

## தோத்திரம் - மந்திரம் - தியானம்

### தோத்திரம்

கருத்தரிக்கும் முன்பி ருந்தே
'கன்னியவள்' அருளைப் பெற்றாய்!
உருத்தரிக்கும் முன்பி ருந்தே
'உத்தமியாள்' உறவைப் பெற்றாய!
'அருள்தரிக்கும்' முன்பி ருந்தே
'அவள்' பாம்பாய் ஊரப் பெற்றாய்!
பொருள் தரிக்கும் மனமில் லாமல்
புகழ் மகனாய் பூத்தே நின்றாய்!

முன்பிறவிச் சித்தனென மொய்ம்பில் ஆகி
'முனைச்சுழியின் விழிகடந்த ஞானத் தீயால்
தன்பிறவி வினைமுடிக்கும் காஞ்சி மேலோன்'
தனிப்பிறவி யுடனிருந்த தவத்தன் ஆனாய்!
உன்குடும்ப வளர்வினிலும் உயர்ந்த 'ஞான
ஒளிக்குடும்ப வளர்' வினையே நாளும் செய்வாய்!
பண்மலர்க்கும் பாமொழியால் பலநூ றான
பாமணமும் பாதமணம் பற்றப் போமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தால் இடத்தால் உண்மை
காணொணாச் சக்தி தன்னைச்
சீலத்தால் பக்தி தன்னால்
திருவருள் கூட்டக் கண்டாய்
ஆலத்தை அமுதா யாக்கும்
ஆதிபரா சக்தி பாலா!
தூலத்தால் தாயைக் கண்டே
தொடர்வினை மடிப்போம் போற்றி!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிளக்கு அகவல்!

விளக்கே திருவிளக்கே வேந்தன் உடன் பிறப்பே
சோதி மணி விளக்கே சீதேவி பொன் மணியே
அந்தி விளக்கே அலங்கார நாயகியே
காஞ்சி விளக்கே காமாட்சி தாயாரே
பசும்பொன் விளக்கு வைத்து பஞ்சுத்திரி போட்டு
குளம்போலவே எண்ணெய்விட்டுக் கோலமுடன் ஏற்றிவைத்தேன்
ஏற்றினேன் நெய் விளக்கு எந்தன் குடி விளங்க
மாங்கல்யப் பிச்சை மடிப்பிச்சை தாருமம்மா
பெட்டி நிறையப் பூஷணங்கள் தாருமம்மா
பட்டி நிறையப் பாற்சுவை தாருமம்மா
புகழுடம்பைத் தாருமம்மா பக்கத்தில் நில்லுமம்மா
அன்னையே அருந்துணையே அருகிருந்து காருமம்மா
வந்த வினையகற்றி மகா பாக்கியம் தாருமம்மா
தாயாரே உன்தன் தாளடியில் சரணடைந்தேன்
மாதாவே உன்தன் மலரடியில் நான் பணிந்தேன்
திருவிளக்குருவாய் திகழ்ந்திடும் தேவி
திருமிகும் லலிதே திருவருள்புரிவாய்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தசஷ்டி கவசம்



## காப்பு

### நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம், துன்பம்போம், நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்(து) ஓங்கும்
நிஷ்டையுங் கைகூடும், நிமலர் அருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

### குறள் வெண்பா

அமரரிடர் தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி

### ஆசிரியப்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக்குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட

மைய நடஞ்செயும் மயில் வா கனனார்
கையில் வேலால் எனைக் காக்க வென்று வந்து
வரவர வேலாயுதனார் வருக,
வருக வருக மயிலோன் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக,
வாசவன் மருகா வருக வருக,
நேசக் குறமகள் நினைவோன் வருக,

ஆறுமுகம் படைத்த ஐயா வருக,
நீறிடும் வேலவன் நித்தம் வருக,
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக,
சரவண பவனார் சடுதியில் வருக,

ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென

வசர வணப வருக வருக,
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக,
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண்டா யுதம் பாசாங் குசமும்

பரந்த விழிகள் பன்னிரண்டிலங்க,
விரைந்(து) தெனைக் காக்க வேலோன் வருக,
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும், உயிரையுங் கிலியும்

கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற்றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன் தினம் வருக,

ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரு கண்ணும், பவளச் செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணி சுட்டியும்,

ஈராறு செவியில் இலகு குண்டலமும்,
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல் பூஷணமும் பதக்கமும் தரித்து,
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்,

முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறு உந்தியும்,
துவண்ட மருங்கில் சுடரொளிப்பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்

இருதொடை அழகும், இணைமுழந் தாளும்,
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென

நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி

டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்கு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து

என்றனை யாளும் ஏரகச் செல்வ!
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க

அடியேன் வதனம், அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும், கண்ணினைக் காக்க
விதிசெவி இரண்டும் வேலவர் காக்க

நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத்திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க

கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார், திருவேல் காக்க

வடிவேல் இருதேள் வளம் பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழு பதினாறும் பருவேல் காக்க

வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாம் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் பெண் குறிகளை அயில்வேல் காக்க

பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க

ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கையிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவளிருக்க

நாவில் சரஸ்வதி நற்றுணையாக
நாபிக் கமலம், நல்வேல் காக்க
முப்பால் நாடியை, முனைவேல் காக்க
எப்பொழுதும் எனை எதிர்வேல் காக்க

அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து, கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க

ஏமத்தில், சாமத்தில், எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க

தாக்கத் தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்

அல்லற் படுவதும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும், குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரம ராட்சதரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட,
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்,
எல்லிலும், இருட்டிலும் எதிர்படும் அண்ணரும்,
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்,

விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்,
தண்டியக் காரரும், சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந்தோடிட
ஆனை அடியினில் அரும்பாவைகளும்

பூனை மயிரும், பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகலசத்துடன்
மனையில் புதைத்த வஞ்சனை தனையும்

ஒட்டிய பாவையும் ஒட்டிய செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட

மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட,
கால தூதாளெனைக் கண்டால் கலங்கிட,
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டலறி மதிகெட் டோடப்

படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம், கதறிடக் கட்டு
கட்டி உருட்டு, கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு,

முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்

பற்று பற்று பகலவன் தணலெரி,
தணலெரி தணலெரி தணலதுவாக
விடுவிடு வேலைவெருண்டது ஓட,
புலியும் நரியும், புன்நரி நாயும்

எலியும் கரடியும் இனித் தொடர்ந்தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க,

ஒளிப்பும் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலப்புப் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிருதி

பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன், கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை, பருவரை யாப்பும்,
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்

நில்லா தோட, நீ எனக் கருள்வாய்,
ஈரேழு உலகமும், எனக்குஉறவாக,
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா,
மண்ணாள் அரசரும் மகிழ்ந்துற வாகவும்,

உன்னைத் துதிக்க, உன்திரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே!
திரிபுர பவனே! திகழொளி பவனே!
பரிபுர பவனே! பவம்ஒளி பவனே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிதிரு மருகா! அமரா வதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா! குகனே! கதிர் வேலவனே!
கார்த்திகை மைந்தா! கடம்பா! கடம்பனை

இடும்பனை அழித்த இனியவேல் முருகா!
தணிகா சலனே! சங்கரன் புதல்வா!
கதிர்கா மத்துறை, கதிர்வேல் முருகா!
பழநிப் பதிவாழ் பால குமாரா!

ஆவினன் குடிவாழ் அழகிய வேலா!
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமராபுரி வாழ், சண்முகத் தரசே!
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்

என் நா இருக்க, யானுனைப் பாட,
என்னைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசம் மாக,
ஆடினேன் ஆடினேன் ஆவினன் பூதியை

நேசமுடன் யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்அருள் ஆக,
அன்புடன் இரட்சி, அன்னமும் சொன்னமும்

மெத்த மெத்தாக, வேலா யுதனார்
சித்தி பெற்றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க

வாழ்க வாழ்க மலைக் குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக் குற மகளுடன்,
வாழ்க வாழ்க வாரணத் துவசம்,
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எத்தனை குறைகள், எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செய்யினும்
பெற்றவன் நீ குரு, பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள், பெற்றவ ளாமே,

பிள்ளை யென்(று) அன்பாய்ப் பிரிய மளித்து,
மைந்தனென் மீது உன் மனமகிழ்ந் தருளித்,
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்,
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய

பாலன் தேவ ராயன் பகர்ந்தைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கம் துலக்கி,
நேசமுடன் ஒரு நினைவது ஆகிக்,

கந்தர் சஷ்டிக் கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்,
ஒரு நாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய,

அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர், சேர்ந்தங் கருளுவர்,
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்,
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்,

நவமதனெனவும் நல்லெழில் பெறுவர்,
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்,
கந்தர் கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க காண மெய்யாய் விளங்கும்

விழியால் காண வெருண்டிடும் பேய்கள்,
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லோர் நினைவில் நடனம் புரியும்,
சர்வ சத்துரு சங்காரத்தடி

அறிந்தெனது உள்ளம், அஷ்ட லட்சுமிகளில்
வீர லட்சுமிக்கு விருந்து உணவு ஆகச்,
சூர பத்மாவைத் துணித்தகை யதனால்,
இருபத் தேழுவர்க்கு உவந்(து) அமுது அளித்த

குருபரன், பழநிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி,
எனைத்தடுத் தாட்கொள் என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி

தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி

கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனகசபைக்(கு) ஓர் அரசே!
மயில்நடம் இடுவோய் மலரடி சரணம்

சரணம் சரணம் சரவண பவஓம்,
சரணம் சரணம் சண்முகா சரணம்!

**- கவசம் முற்றிற்று -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தரலங்காரம்

நாளென் செயும்வினை தானென்
செயுமெனை நாடிவந்த
கோளென் செயுங்கொடுங் கூற்றென்
செயுங்கும ரேசரிரு
தாளுஞ் சிலம்புஞ் சதங்கையுந்
தோளுங்கடம்பு மெனக்குமுன்
னேவந்து தோன்றிடினே.

விழிக்குத் துணைதிரு மென்மலர்ப்
பாதங்கள் மெய்ம்மை குன்றா
மொழிக்குத் துணைமுருகாவெனு
நாமங்கள் முன்புசெய்த
பழிக்குத் துணையவன் பன்னிரு
தோளும் பயந்ததனி
வழிக்குத் துணைவடி வேலுஞ்செங்
கோடன் மயூரமுமே

பாலென் பதுமொழி பஞ்சென்
பதுபதம் பாவையர்கண்
சேலென் பதாகத் திரிகின்ற
நீசெந்திலோன்றிருக்கை
வேலென் கிலைகொற்றமயூர
மென்கிலைவெட் சித்தண்டைக்
காலென்கிலைமன மேயெங்ங
னேமுத்தி காண்பதுவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஞ்சநேயர் துதி



வானரப் பெண் அஞ்சனைக்கும் வாயு பகவானுக்கும் அவதரித்த பிள்ளையே இராமபக்த ஆஞ்சநேயராவார். இவர் குழந்தைப் பருவத்தில் உதய சூரியனைப் பழமென நினைத்து அதைப்பெற சூரிய மண்டலம் சென்று திரும்பியவர். இவருக்கு அனுமான், மாருதி, வாயபுத்திரன், அஞ்சனை புத்திரரெனப் பல நாமங்கள் உண்டு. இவர் கிரேதாயுகத்தில் அவதரித்து இன்றும் சிரஞ்சீவியாக வாழ்பவர். இராமர், இராவணனை மாய்ப்பதற்கும், அவனிடமிருந்து சீதையை மீட்பதற்கும் உறுதுணையாக இருந்தவர். பாரதப்போரில் அர்ஜுனனின் தேர்க் கொடியில் இருந்து கொண்டு பாண்டவர் களுக்கு வெற்றிவாகை சூட்டிக் கொடுத்தவரும் இவரே. அடுத்த படைத்தற் தொழிற் கடவுள் பிரமாவாகப் பதவி ஏற்க இருப்பவரும் இவரே. தற்சமயம் பதவியிலிருக்கும் பிரமாவுக்கு 51 வயது நடை பெறுகின்றது. 100 தேவ ஆண்டில் இவரின் ஆயுள் முடிவடையும். ஆஞ்சநேயர் சீதாப்பிராட்டியாரை தேடி இலங்கை வந்த பொழுது முதல் முதலில் அவர் கால் பதிந்த இடம் என நம்பப்படும் நம்பொடை வெவண்டன் மலையில் 18 அடி உயரமுள்ள ஆஞ்ச நேயருக்கு ஆலயம் ஒன்று சின்மயா மிஷனால் 1999ம் ஆண்டு அமைக்கப்பட்டுள்ளது. இவருக்குப் பிரீதியானவை வெண்ணெய், வெற்றிலை மாலை போன்றவையே. ஸ்ரீ இராம ஜெயம் ஸ்ரீ இராம ஜெயம் என்று ஜெபித்தால் ஆஞ்சநேயரின் அருள் எமக்குக் கிடைக்கும்.

**அஞ்சிலே ஒன்றுபெற்றான் அஞ்சிலெ ஒன்றைத்தாவி**
**அஞ்சிலே ஒன்றுஆறாக ஆரியர்க்காக ஏகி**
**அஞ்சிலே ஒன்றுபெற்ற அணங்கைக்கண்ட அயலாரூரில்**
**அஞ்சிலே ஒன்றை வைத்தான் அவன் நம்மை அளித்துக் காப்பான்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெய ஹனுமான் பாடல்



ஜெய ஹனுமான் ஜெய ஹனுமான்
மாருதி ராயா ஜெய ஹனுமான்
ஜெய ஹனுமான் ஜெய ஹனுமான்
வாயு குமாரா ஜெய ஹனுமான்
ஜெய ஹனுமான் ஜெய ஹனுமான்
அஞ்சலி புத்ரா ஜெய ஹனுமான்
ஜெய ஹனுமான் ஜெய ஹனுமான்
ஸ்ரீராம தூதா ஜெய ஹனுமான்
ஜெய ஹனுமான் ஜெய ஹனுமான்
மஹானுபாவா ஜெய ஹனுமான்
அஞ்சலி மைந்தா ஆஞ்சநேயா
அருளது தருவாய் ஆஞ்சநேயா
ஆபத்பாந்தவா ஆஞ்சநேயா
ஆதரித்தருள்வாய் ஆஞ்சநேயா
இலங்கையை எரித்தவா ஆஞ்சநேயா
இகபர சுகமருள் ஆஞ்சநேயா
ஈடில்லா பலவானே ஆஞ்சநேயா
ஈகை மிகுந்தவா ஆஞ்சநேயா
உலகம் வியக்கும் ஆஞ்சநேயா
உன்பக்தன் நானய்யா ஆஞ்சநேயா
ஊக்கம் தருவாய் ஆஞ்சநேயா
ஊழ்வினை தீர்ப்பாய் ஆஞ்சநேயா
எங்கள் நாயகா ஆஞ்சநேயா
எங்களைக் காப்பாய் ஆஞ்சநேயா
ஸ்ரீ ராமபக்தா ஆஞ்சநேயா
சிறப்பாக வந்தெனை ஆளுமையா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆறு துணை!

ஓம்சக்தி ஓம் சக்தி ஓம் - பராசக்தி
ஓம்சக்தி ஓம் சக்தி ஓம்
ஓம்சக்தி ஓம் சக்தி ஓம் - ஓம் சக்தி
ஓம்சக்தி ஓம் சக்தி ஓம்

கணதி ராயன் - அவனிரு
காலைப் பிடித்திடுவோம்
குணமுயர்ந் திடவே – விடுதலை
கூடி மகிழ்திடவே.

(ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்)

சொல்லுக் கடங்காவே – பராசக்தி
சூரத் தனங்களெல்லாம்
வல்லமை தந்திடுவாள் - பராசக்தி
வாழியென் றேதுதிப்போம்

(ஒம்சக்தி ஓம்சக்தி ஓம்)

வெற்றி வடிவேலன் - அவனுடைய
வீரத்தி னைப்புகழ்வோம்
சுற்றிநில் லாதேபோ! – பகையே!
துள்ளி வருகுதுவேல்.

(ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்)

தாமரைப் பூவினிலே – சுருதியைத்
தனியி ருந்தேயுரைப்பாள்
பூமணித் தாளினையே – கண்ணிலொற்றிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்ணிய மெய்திடுவோம்.

(ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்)

பாம்புத் தலைமேலே – நடஞ்செயும்
பாதத்தி னைப்புகழ்வோம்
மாம்பழ வாயினிலே- குழலிசை
வண்மை புகழ்ந்திடுவோம்.

(ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்)

செல்வத் திருமகளை – திடங்கொண்டு
சிந்தனை செய்திடுவோம்
செல்வமெல் லாந்தருவாள் - நமதொளி
திக்கனைத்தும் பரவும்.

(ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவக்கிரஹ தோஷம் நீங்க...

## நவக்கிரஹ துதி

**ஞாயிறு**

சீலமாய்வாழ சீரருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சுந்தரா போற்றி
வீரியா போற்றி வினைகள் களைவாய்

**திங்கள்**

எங்கள் குறைகள் எல்லாம் தீர்க்கும்
திங்களே போற்றி திருவருள் புரிவாய்
சந்திரா போற்றி சற்கணா போற்றி
சங்கடம் தீர்ப்பாய் சந்திரா போற்றி

**செவ்வாய்**

சிறப்புற மணியே செவ்வாய்த் தேவே
குறைவில்லாதருள்வாய் குணமுடன் வாழ
மங்கலச் செவ்வாய் மலரடி போற்றி
ஆங்காரஹனே அவதிகள் நீக்கு

**புதன்**

இதமுற வாழ இன்னல்கள் நீக்கு
புதன்பகவானே பொன்னடி போற்றி
பதம் தந்து ஆள்வாய் பண்ணொலியானே
உதவியாய் அருளும் உத்தமா போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வியாழன்**

குணமிகு வியாழ குருபகவானே
மணமுள்ள வாழ்வு மகிழ்வுடன் அருள்வாய்
பிரகஸ்பதி வியாழ பரகுருநேசா
கிரகதோஷ மின்றிக் கடாட்சித் தருள்வாய்

**வெள்ளி**

சுக்கிர மூர்த்தி சுகமிக ஈவாய்
வக்கிரமின்றி வரமிகத் தருவாய்
வெள்ளிச் சுக்கிர வித்தக வேந்தே
அள்ளிக் கொடுப்பாய் அடியார்க்கருளே.

**சனி**

சங்கடம் தீர்க்கும் சனிபகவானே
மங்களம் பொங்க மனம் வைத்தருள்வாய்
சச்சரவின்றி சனீஸ்வரத் தேவே சாகாநெறியில்
இச்சகம் வாழ இன்னருள் தாதா

**ராகு**

அரவெனும் ராகு ஐயனே போற்றி
கரவாதருள்வாய் கஷ்டங்கள் நீக்கு
ஆக அருள்புரி அனைத்திலும் வெற்றி
இராகு கனியே ரம்மியா போற்றி.

**கேது**

கேது தேவே கீர்த்தித் திருவே
பாதம் போற்றி பாவம் தீர்ப்பாய்
வாதம் வம்பு வழக்குகள் இன்றி
கேதுத்தேவே கேண்மையாய் ரக்ஷ!

**இந்த நவக்கிரக ஸ்தோத்திரம் சொல்லி ஒவ்வொரு கிரகத்திற்கும் ஒரு மலர் வீதம் ஒன்பது மலர்களை இடவும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரவக்கடவுள்



பரமனைமதித்திடாப் பங்கையாசனன்
ஒருதலைக்கிள்ளியே யொழிந்தவானவர்
குருதியுமகந்தையுங் கொண்டுதண்டமுன்
புரிதருவடுகனைப் போற்றிசெய்குவோம்

வெஞ்சினப்பரியழன் மீதுபோர்த்திடு
மஞ்சனப்புனையென வாலமாமெனச்
செஞ்சுடர்ப்படிவமேற் செறித்தமாமணிக்
கஞ்சுகக்கடவுள் பொற்கழல்களேத்துவாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ மாருதி கவசம்



மார்கழி மூலம் அனுமன் பிறந்தான்
அனைவர்க் அருள அவனியில் வந்தான்
அஞ்சனை மாருதம் அளித்த நற்செல்வன்
அனுமனை போற்றி அவனியில் வாழ்த்த

வஞ்சனை நீக்கும் அஞ்சனை செல்வன்
கதாயுதனை காற்றின் மைந்தனை இன்சொல்
அந்தே கொண்டு [illegible] அனைத்தும் காக்க
சதா அபி டேகம் சாற்றுவர் உவந்து

காக்க காக்க அனுமன் காக்க
நோக்க நோக்க நுணுகி நோக்க
தீர்க்க தீர்க்க தீவினை எல்லாம்
சேர்க்க சேர்க்க செம்பொருள் அனைத்தும்

ஆர்க்கும் பகைவர் அலறி ஓடிட
வேர்க்குள் பகையாய் விழைந்தவர் அழிய
காக்க காக்க கண்ணுதல் காக்க
பார்க்குள் அவன்போல் இறைவன் இல்லை

ஓம் ரீம்ஸ்ரீ ஜெய ராம் எனும் அனுமன்
க்ரீம் க்ளீம் ஸ்ரீராம பக்த அனுமன்
ஹம்க்ரீம் என்றே கொடியில் ஆர்க்கும்
ஸ்ரீஜெய ராம பக்த அனுமன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்க காக்க கவசம் இதனை
போக்க போக்க பொய்யை தீமையை
தீய்க்க தீய்க்க தீவினை எல்லாம்
சேயாய் பிறந்து செய்வினை அறிந்து

சேவை செய்ய வாயு உகந்தான்
ஆவி அனைய அஞ்சனை மாதும்
அதனை உகந்தாள் அவனி உதித்தான்
மாருதி என்போன் மாருதம் அனையன்

பாரதில் என்றும் நிலவும் சீரோன்
பாரதம் போற்றும் பண்பு டையாளன்
காரணம் அவனே காருண்யம் அவனே
நாரணன் ராமன் நடவெனச் சொன்னான்

ஆதவன் மகிழ்ந்து கல்வியைத் தரவும்
பூதவம் செய்ததால் பூமியில் வாழ்ந்தும்
மாதவம் இயற்று சிரஞ்சீவி அவனே
ஆதவன் குலத்தின் ஆணி அவனே

ராமனும் கண்ணனும் வாழ்தநற் பூமியில்
ராமனைத் தன்னுடை நெஞ்சினில் வைத்தான்
ராகவன் தூதன் ஆதவன் குலத்தைக்
காத்து நின்றவன் காக்க என்னை

காக்க காக்க அனுமன் காக்க
காக்க காக்க கால்கள் இரண்டை
காக்க காக்க கணுக்கால் முழந்தாள்
காக்க காக்க கருணையில் காக்க

தீக்குள் புகையாய் திகழும் பொய்மை
போக்க போக்க புன்மையைப் போக்க
குருதி அதனில் ஒருரணம் இன்றி
மாருதி காக்க மாருதம் போல

இறுதி இல்லா இறைவன் காக்க
உறுதி அளிக்கும் உயர்வோன் காக்க
அஞ்சனை செல்வன் அடியினை காக்க
வஞ்சனை ஏதும் வாட்டா வண்ணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆஞ்ச நேயனே அடிவயிறு காக்க
துஞ்சும் போதும் துயருறா வண்ணம்
காக்க அனுமன் கண்ணினை காக்க
போக்க எந்தப் பொல்லா வினையும்

நோக்க நோக்க உண்மையை உறுதியை
தீக்குள் இலங்கை செற்றான் காக்க
போக்கும் வரத்தும் கபீந்திரன் காக்க
நோக்கம் காக்க நுணுகி நோக்க

பிட்டம் அதனை அனுமன் காக்க
வட்டக் குதத்தை வாலினால் காக்க
அட்டமச் சனியால் அடையம் துன்பம்
அனைத்தும் நீக்கி அனுமன் காக்க

சிற்றிடை அதனை அஞ்சனை செல்வன்
சிறப்புடன் காக்க சேர்க்கப் பெருமை
நற்றவ மிக்கோர் நவையறு நல்லோர்
நாணங் கயிற்றை அனுமன் காக்க

நற்குறி தன்னை காற்றின் செல்வன்
காக்க காக்க காக்கவந் துவந்தே
மார்பின் மதாணி மதகரி கேள்வன்
மாருதி காக்க மதிக்க வந்துவந்தே

ஆர்முன் பின்னென் றது ஒரு கேள்வி
ஆகா வண்ணம் அனுமன் காக்க
சீர்வனம் உறும் இறை செல்வன் காக்க
சீர்த்திகள் அருள்க செந்திரு மாலென

கூர்நக முடைய குரங்கினத் தலைவன்
காக்க காக்க கதிர்முடி யாலே
ஆர்க்க ஆர்க்க அனைத்துயர் போர்க்களம்
வேர்க்க வேர்க்க சூர்ப்பகை வெருள

தீர்க்க தீர்க்க தினகரன் மாணி
தீராக் கொடுமை எல்லாம் தீர்க்க
ஈரல் இரைப்பை இதனைக் காக்க
ஆவலைத் தூண்டும் அரியவன் நீயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆமரி அவனின் ஓர் துணை நீதான்
போயெவர்க் கூறினும் போற்றுதல் அறியார்
நீயறி இதனை நினைவாய்க் கொண்டே
நித்தம் நேர்ந்திடில் நிரம்ப சந்தோஷமே.

மார்பைக் காக்க மாருதி மகிழ்ந்தே
மற்றுள உறுப்பை மகிமையன் காக்க,
சார்புள உறுப்பை சற்குணன் காக்க
சற்று மேலான கழுத்தை அனுமன்

ஆர்வமுடனே அணைத்தெனைக் காக்க
அனைத்துப் பல்லையும் அனுமன் காக்க
அருவிழி இரண்டும் சூர்ப்பகை காக்க
அனைத்துப் பெருமை எனக்கு உறினும்

தருவெனும் அனுமன் என் சிரம் காக்க
நாசியை வாசியை நல்லவன் காக்க
பெருமைகொள் அனுமன் பிடரியைக் காக்க
பேசிடும் நாவைப் பெரியோன் காக்க

அருவிழி தன்னில் அனுமன் காக்க
அரஹர சிவசிவ ஸ்ரீஜெய ராமமென
அனைவரும் துதிக்கும் அனுமனே காக்க
காக்க காக்க கவலைகள் நீக்க

ஐயும் கிலியும் சௌவும் நீக்கி
அனைத்தும் அழிக்கும் அரியவன் காக்க
பொய்யும் களவும் போதாறு கென்றே
புரையா அன்பு மறைமுதல் காக்க

எய்யும் கணைபோல் இறைவர்க் காமோர்
இமையே போலும் தூதன் காக்க
செய்யும் செயலில் செம்மை வல்லான்
செம்பொருள் காக்க சிறந்திடக் காக்க

******


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்களம் அருளிடும் மாருதியே!

மங்களம் அருளிடும் மாருதியே - நல்ல
மாங்கல்ய வரம் வேண்டும்
மஞ்சளும் குங்கும மாலையுடன் - நான்
வாழ்ந்திடும் சுகம் வேண்டும்

பன்னீர் பூப்பறிந்து நான் மாலைகள் தொடுக்கட்டுமா
கண்ணீர் பூக்களினால் உன் காலடி கழுவட்டுமா ங்களம்....

நித்தமும் ராம ஜெயமதை எழுதிடும்
என் பணி தொடர்கின்றது
வெற்றிலை மாலைகள் வேந்தனுன் தோளுக்கு
என் கரம் தொடுக்கின்றது

ஊர் என்னைப் பார்க்கின்ற பார்வையில் - எந்தன்
உள் மனம் அழுகின்றது
பார் என்னைப் போற்றிட வாழ்ந்திடவே - ஐயன்
உன் பதம் தொழுகின்றது

சீதையைக் காத்தருள் புரிந்தவனே - இந்த
பேதையைக் காத்திடய்யா மங்களம்....

பொன்மணி வைரங்கள் பூவையர் வாழ்வினில்
நிம்மதி சேர்த்திடுமா
பொட்டிலும் பூவிலும் கிடைக்கின்ற பேரின்பம்
வேறொன்றில் சேர்ந்திடுமா

நெய்யினில் தீபங்கள் ஏற்றிவைத்தேன் - மன
தீபத்தில் ஒளி வருமா
அஞ்சனை செல்வனுன் சரணடைந்தேன் - கொண்ட
காயங்கள் சுகம் பெறுமா

சந்தன வாசனை மேனியனே - உள்ளக்
குமுறலை நீக்கிடய்யா மங்களம்.....

******



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்களம்!

சங்கராய சங்கராய சங்கராய மங்களம்
சங்கரி மனோஹராய சாஸ்வதாய மங்களம்
குருவராய மங்களம் தத்தாத்ரேய மங்களம்
கஜானனாய மங்களம் ஷ்டாணனாய மங்களம்
ரகுவராய மங்களம் வேணுக்ருஷ்ண மங்களம்
சீதாராம மங்களம் ராதாக்ருஷ்ண மங்களம்
அன்னை அன்னை அன்னை அன்னை அன்பினுக்கும் மங்களம்

ஆதி சக்தி அம்பிகைக்கு அனந்த கோடி மங்களம்
என்னுள்ளே விளங்கும் எங்கள் ஈஸ்வரிக்கு மங்களம்
இச்சையாவும் முற்றுவிக்கும் சித்சிவைக்கு மங்களம்
நாமகீர்த்தனம் பரந்துநானிலம் செழிக்கவும்
வேறிடாத இன்பம்பொங்கி வீடெல்லாம் விளங்கவும்
ஞான தீபமேற்றி என்றும் நாமகீதம் பாடுவோம்
தர்ம சக்தி வாழ்க வென்று சந்ததம் கொண்டாடுவோமே!

❖❖❖

ஓம் ஸ்வஸ்தி ப்ரஸ்ாப்ய பரிபால யந்தாம்
ந்யானேய மார்கேண மஹீம் மஹீசா
கோப்ராஹ்மணேப்ப ஸுபமஸ்து நித்யம்
லோகா ஸமஸ்தா ஸுகினோ பவந்து!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்களம்


அப்பனுக்கும் அம்மைக்கும் மங்களம்
அத்துவித வஸ்துவுக்கு மங்களம்
ஒப்பில்குரு நாதனுக்கு மங்களம்
உத்தம பத்தருக்கு மங்களம்
முப்பொழுதும் தொழுவார்க்கு மங்களம்
மூவாசை வென்றவர்க்கு மங்களம்
முப்பத்து முக்கோடி தேவர்க்கும் மங்களம்
முனிவர்க்கும் இருடிகட்கும் மங்களம்
தன்னைத்தன்னா லறிந்தவர்க்கு மங்களம்
ஐமிட்டு உண்பவர்க்கு மங்களம்
ஐயமில்லாச் சாதுகட்கு மங்களம்
ஆதியந்த மில்லாத ஆன்மாவுக்கு மங்களம்
சீர்காழித் தேவர்க்கு மங்களம்
திருநாவுக் கரசருக்கு மங்களம்
சீர்பெருகு சுந்தரர்க்கு மங்களம்
திவ்விய மாணிக்கர்க்கு மங்களம்
எங்கும் தங்கும் உயிர்களுக்கு மங்களம்.

**மங்களம் ஜெய மங்களம்**
**மங்களம் ஜெய மங்களம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Like Us

f You Tube / GayathriPublication


விலை : 250/=


ISBN : 955-8741-69-6

9 789558 741696 >



Gayathri Publication

P. Box No. 64, Dehiwela, Sri Lanka

011 4981906, 0777 892028

Web site : www.gayathiri.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org